திராவிடன்

V1. No.8 23 மே 1928

JL
[illegible], N28KH
N28·1·8.
188991

867

Reg. No. M. 2324. தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்
வாரப் பத்திரிகை.

REGISTRAR OF BOOKS
8 MAY 1928
MADRAS

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரூ. 7 8 0
புற நாடு .. ... ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வெள்ளாளர் தேரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 1.] 1928வரு பிப்ரவரிமீ 23உ [No. 8.

பொருளடக்கம்.

| | | பக்கம். |
|---|---|---|
| 1. | செய்யும் கருமமும் செயல் வகையும். | 141 |
| 2. | காந்திமதி (A novel) T. N. சேஷாசலம் B. A. B. L. | 142 |
| 3. | சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A. B. L. | 145 |
| 4. | தமிழ்ப்பாடம். | 148 |
| 5. | வானசாஸ்திரம் | 151 |
| 6. | மலர்வனம், "மதுகரம்" | 152 |
| 7. | கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A. B. L. | 155 |
| 8. | வயலெலிக் குரைத்த வார்த்தை (Robert Burns) | 157 |
| 9. | வர்த்தமானம் | 158 |

## கலா நிலயம்.

### செய்யும் கருமமும் செயல் வகையும்.

VII

188191

வாழ்க்கைச் செயலிலும் நினைவிலும் தன்னயம் மறத்தலென்றும், ஆய்கின்ற அறிவிற்கு மெய்ம்மையென்றும், ஊடாடுகின்ற அவ்வொருதத்துவத்தை உள்ளத்தின் உணர்வின்பால் அழகெனும் பண்பினில் நீரொடு நீர் சேர்ந்தன்ன மனங்கலந்து பழகுதலன்றி மக்கள்நாம் உய்ந்து கரையேற உற்றதோர் உபாயம் வேறொன்றில்லை என்னும் வாய்மையை எம்மாலியன்றளவு இதுகாறும் எடுத்தோதினோம். ஆயின், அன்னவாறு பழகுதற்குரிய அழகினை எதன்பால் எவ்வகை நாடிப்பயில்வதற்கெளிதியலுமென்பதை இங்குக் கூறவேண்டி வருகின்றது.

கற்செதுக்கி உருவமைக்கும் சிற்பமும், தீட்டிய வண்ணத்தால் வடிவமையும் சித்திரமும், நிற்கின்ற நிலையாலும் அசைகின்ற உறுப்பாலும் பொருள் படுத்தும் நடனமும், ஒலியுருட்டி இசையெடுக்கும் கீதமும், சொற்கொண்டு சுவையளிக்குங் கவிகளும், கலையெனப் பொதுப்பெயர் பெற்ற அழகின் திறங்களாதலால் அவைகளுக்கு உறவாயிருப்பதே அழகினோடு பயில்வதாகும். கலைவலான் தனதுள்ளத்தில் பொலிகின்ற அழகினை, இவ்வகைகளால் பிறர்க்குப் புலனும் வண்ணம் தோற்றுவிக்கின்றனன். தோன்றிய இவ்வழகைக் கண்ணாற்சில காதாற்சில அள்ளியுண்டு நம் மனதினிடத்தில் கொண்டுபோய்ச் சேர்க்க அங்கது எங்கும் பரவி நினைவையும் நினைவாற் பிறக்கும் செயல்களையும், முன் நாம் கண்டவாறு, அழகு மயமாக்கி விடுகின்றது. கலைப் பொருள்கள்பால் கண்ணுங் காதும் சுவையேகருதி நாடுவனபோல் தோன்றினும் உண்மையிலவை மனதிற்கு உணவாம் வகையே உதவுகின்றன. வயிற்றின் செயலும் அவ்வழியே. உண்பனயாவும் நாவிற்குச் சுவையோடமைதல் ஒருவகை இன்றியமையாதேனும், பிள்ளைப்பருவம் தாண்டியபின், அவைகளை உணவென்ற நினைவிற்றான் கொள்கின்றோம். இன்னுமொன்று இவ்வுவமையிற் சிந்தித்தற்குளது. வயிற்றிற்கு உணவென்று கூறும்வழக்கு முற்றிலும் சரியல்ல. உண்ட உணவு வயிற்றிற் சேரினும் அது வயிற்றிற்காக அன்றே. இவ்வுணவு உடலிற்கோருயிராய்த் திரியுமா றண்கின்றோம். வயிற்றுணவு உடலிற்கு உயிராகக் கலையெனுமனத்துணவு அவ்வுயிர்க்கே உயிராய் அமையுமாறு முன் கண்டோம். ஆனது பற்றியோ, 'செவிக்குணவில்லாதபோது வயிற்றிற்குஞ் சிறிது அருந்தப்படும்' என்றனர் ஒரு புலவர்!

அழகு நிலவிய உள்ளத்தில் இடைவிடாது உவகையும் சுரந்த வண்ணமாயிருக்கும். உவகையால் ஒருவன் அடையும் பயன் செப்பும் திறமல்ல உவகையொன்றே ஆக்கும், மற்ற மனோவிகாரங்களெல்லாம் அழிக்கும் உணவு வயிற்றிற் சென்றதும் அது சமிக்கும்பொருட்டுப் பல நீர்கள் (Digestive Secretions) உள்ளே ஊறுவதுபோல் மனதிலே அழகு எய்தியதும் அது சமித்து வாழ்க்கையோடு கலப்பதற்கு உவகை சுரக்கின்றது. முன்னுண்ட உணவே இந்நீர்களாக மாறிப் பின்வரும்

உணவைச் சமித்துவைக்கின்றதென்பதைச் சரீர சாஸ்திரவாயிலாக அறியலாம். அவ்வாறே மானஸ சாஸ்திரத்திலும், அழகினின்றே உவகை யூறி அவ்வுவகையே மீண்டு மவ்வழகைச் சீரணம் செய்கின்றதென்பது அதிசயமல்ல. அழகொடு உவகை சேர்வதே கலைகள் தோன்றுவதற்கு ஆதாரம். தீக்கட்வெம்மனப்புலி என்றும் ஆடாது, பாடாது. மயிலே ஆடும், குயிலே பாடும். உவகையென்பது ஒரு ஒட்டுவாரொட்டி. உவகையால் ஒருவன் பாட அதைக் கேட்போருக்கும் உவகை உண்டாகின்றது. ஆதலால், உண்பவர்க்கு உணவு ஆக்கித்தந்து பின் தானுமே உணவாகிவிடும் தண்ணீர்போல், இக்கலைகளும் அழகையும் உவகையும் ஆக்கித்தந்து பின் தாமேயும் அவ்வழகும் உவகையும் ஆகிவிடுகின்றன. ஒருவனது சிந்தையை நன்னினைவிலேயே நிறுத்தும் பான்மையில் கலையழகு உவகை என இரண்டும் ஒன்றேயாய் ஒரேவகையில் உதவுகின்றன. பாட்டினிற்கு ஈடுபடாதவன் படுகொலைக்கஞ்சாப் பாதகன் என்றறைந்த ஷேக்ஸ்பியரும், வாய்விட்டு ஒருபோதும் நகைத்திராதானை நம்பலாகாது என விதித்த கார்லைலும், ஒன்றையே கருதி இருவகையாய்க் கூறியுளர்.

ஓவியப்புலவன் இன்னிசைவாணன் தீஞ்சொற் கவிகள் அனைய கலைஞர், எங்கும் நிறைந்த அழகை ஒவ்வோர் விதத்தில் உருச்செய்து தருகின்றவர். இவ்வகைக் கருதுங்கால் கலைகள் யாவும் செயற்கையழகு என மதிக்கப்படும். மனிதனின் செயல் இடைபுகுதாமல் தானே அமைந்த அழகு இயற்கையழகு. ஈசுவரசிருஷ்டி இயற்கையழகு, மானுடசிருஷ்டியாகிய கலைகள் செயற்கையழகு. மலர்ந்த மலரும், குயிலின் குரலும், அந்தி மாலையும், உதிக்கின்ற மதியமும், விலங்கு முடுத்திரள் விசும்பினகலமும், பெரு வரையும் சிறுமணியும் யாவும் இயற்கை வனப்புடையன. கலைகளாலுறுகின்ற உவகைபோன்றே இவைகளும் உவகை யூட்டுகின்றன. இனி, மக்களுள்ளும் இயற்கையாய் நிகழ்கின்ற சில செயல்களுக்கும் கலையின் செயற்கைபோல அழகும் உவகையும் அமைந்துள்ளன. கல்வியால் தேர்ந்தவன் சொல்லும், கல்லாத குழவியின் மதலையும், கணிகையர்புரியும் நடனமும் குழவிகள்பயிலும் தளர்நடையும், யாவும் அழகெனவழைக்கப் பெற்று உவகைக்கு ஆதாரமாவது அனைவரும் அறிவர்.

ஆதலால், எங்கும் நிறைந்து காணவல்லோர்க்குக் காணுமிடந்தோறும் விளங்குகின்ற இயற்கையினழகும், அழகின் உணர்ச்சியால் ஆக்கிய கலைச் செயலழகும் இருக்க, அழகோடு பயில்வதற்கு அவாவுவோர் இவ்விரண்டினுள் எதன்பால் முதலில் பயின்று முதிர்தல் ஏற்புடைத்து !

இயற்கை வனப்பும், கலைகளும், அக்கலைகளுளடங்கிய பல வகைகளும், அழகு உவகை எனும் பொதுத் தன்மையில் ஒன்றற்கொன்று ஏற்றந் தாழ்விலது. வல்லார்க்கு எல்லாம் பொது! ஆனால் வல்லுனராகுமுன் பயிற்சிமுறையில் இனிமையும் சுலபமுமாய் அமைகின்ற விதத்தில் தக்கது இதுவெனத் தேர்ந்தெடுத்தல் இயலும். இயற்கையினழகு இரகசியமானது. ஈசுவரன் தனது ஆனந்தத்தை அமைத்துக்காட்டிய குறிப்பு உருவங்கள் அவை. ஆதலால் பாமரர்க்கு அது எளிதில் புலப்படுவதில்லை. சொல்லரியநெறியை ஒரு சொல்லாலுணர்த்திப் பின் மவுனமடைகின்ற குருமொழி கொள்ளுதற்குச் சீடராய்ச் சனகன்முதல் முனிவோர்களல்லரோ அமைவர். இறைவனது குறிப்புரைகளை நாம் எளிதில் உணரவல்லோமல்லோம். இதுபற்றியே எளிதிலுணர இயன்றவைகள்மாட்டே மனம் முதலில் நாடுகின்றது. இயற்கையின் பிரதிகளாயமைந்த செயற்கைகள் உணர்தற் கெளியன வாதலால் முதிராமனம் இவைகளைவிரும்புவது இயல்பே. இல்வாழ்க்கையில் இயற்கையா யமைந்த அழகினை அனுபவிப்பார் எத்தனைபேர். ஆனால் அதையே நாடகமாய் நடித்துக் காட்டினால் ஊர்திரண்டு அங்குச் செல்கின்றது. கடலினை அதன் அழகிற்காக நாடுபவர் எத்தனைபேர். ஆனால் கடல்காட்சி இந்த நாடகத்தில் வருமென்றால் அதனைக்காணக் காசு கொடுக்கின்றனர். மலையும் அருவியும் எத்தனைபேர் மனதைக் கவர்கின்றன ! ஆனால் மண்ணைப்பிடித்து மலையென்று வைத்தால் அதை விலைக்கு வாங்குகின்றனர். எனவே இயற்கையினழகு எத்துணைச் சிறப்பு வாய்ந்ததெனினும் அதன் பொருளை எய்தி உணருமுன் செயற்கையால் சில பயின்றமைதலே முறையாம். இறைவன் குறித்தவைக்குப் பல பிரதிகளைப் போல் கலைஞர் செய்த செயல்களை மெள்ள மெள்ள மனதை மூலத்தின்பால் வசியப்படுத்திக்கொண்டு போய் நிறுத்துதற்குச் சாதகமானவைகளாம்.

காந்திமதி என்னும்

# காந்தாரநாட்டுக் கட்டழகி.

(135-வது பக்கத் தொடர்ச்சி)

## 7. முயலும் சிங்கமும்.

சந்திரகுப்தன் காலத்திற் பிறந்து அசோகனிடம் வளர்ந்து ஹர்ஷமன்னன் மனமுவக்க வடதிசை வாயில் தாண்டித் தவழ்ந்துசென்ற புத்தமதம், அறமுடைய பேரரசன் விச்வகேசரி புரந்திடும்நாள், குறுநடை பயின்று காந்தாரந்தன்னுள் திருநடம் புரியப் புகுதலாயிற்று. புகுதரும் பிள்ளைமதத்தை ஆங்கோர்சிலர் வாரியெடுத்து மார்புறத்தழுவி யீன்றமகவினும் இனிது பேணிப் பாராட்டிட, அஃது சுயமதப் பற்றுடைய சமயிகள் தம்முன் அருவருப்பிற் கிடனாய்ச் சல்லிவேர் ஆணிவேராவதற்குள் அப்புறமதத்தைக் களைந்தெறிய அவர் பல்வேறு உபாயங்கள் முயல்வாராயினர். மதவுரிமைக் கிடையூறாய்த் தன் குடிகளுக்கு யாதும் இழைக்காதலால் தமதரசனுதவி அன்னார்க்கு இவ்வகையில் கிடைப்பதற்கில்லை. அன்றியும் மதசம்பந்தமான நிர்வாக வதிகா



ரம் பெரும்பான்மை அந்நாட்டின் மடத்தின்கண்ணே தோன்றுதொட்டிருந்து வந்தது.

அக்காலம் மடத்திற் கதிபதி பீடத்தமர்ந்தவர் அருட்கடல் அகிலாண்டேச்வர ஆசார்ய சுவாமிகள் என்பவர். இவர் காவியு மணியுமாய்ப் பொன்னெனத் திகழும் திருமேனியில் வெண்ணீறு தீட்டி உருத்திராக்கம் புரளப் புரளத் தரைமிசை நடப்பினும் சிவிகை யுகைப்பினும் பார்ப்போர் மனத்தில் பக்தியாம் வெள்ளம் பழுதறப் பெருக்கிடும் பான்மைத்தாய தோற்றமுடையவர். வாய்மையும் சீலமுமென குண்டல மிரண்டும் இருளகற்றி யவரிருபுற மிலங்கின. அன்பாலியன்று அன்பேயாகி அன்புதானளிக்கும் மனதொடு வாக்கும் யாக்கையும் மாண்புறப் பெற்றவச் செவ்வியோர் பாதம்பற்றிய பாதுகைதானும் அன்பும்அறனும்போன்றே இப்பியத்தேசுடன் விளங்கியதென்றால் வேறுபல புகல்வதாலேது பயன்! இத்துணைப் புனிதராய இவ்வுத்தமர் ஆன்மகோடிகளனைத்தையும் தன் கையடைப் பொருளாய்க் கருதி அவை அடாநெறி செல்லாவண்ணம் காத்தலே கடனெனும் எண்ணமுடையர் என்பதறிந்த மதப் பாஷாண்டிகள் அவர்பாலணுகிப் புத்தமதம் தலையெடுக்கா தொடுக்க நேரிது மல்லாததுமான முறை சில அனுசரிப்பான் வேண்டியும் தூண்டியும் முயன்றனர். மடாதிபதியோ முதலில் அவர்களுக்கு இடங்கொடுக்காமல், "யானறிந்த வரையில் எம்மறைதந்த முடிபிற்கும் பௌத்தர்தம் கொள்கைக்கும் யாதும் முரண் காண்கிலேன். அன்பே சிவம் என்பதற்கும் சிவமே அன்பு என்பதற்கும் மாறுபாடேதேனு முளதாயினல்லாது நமது சித்தாந்தத்திற்கும், அன்னவர் சமய நெறிக்கும் ஏது பகை," என்று இன்னவாறு எடுத்துக் காட்டி யனுப்பிவிடுவார். எனினும் காலவளவில், தன்மதம் விட்டுப் பிறமதம் பற்றுவோன் புத்தியிலற்பன் செய்கையிற்றீயன்என்றவர் எண்ணும்வகை வரவர நேர்வதாயிற்று. இதற்குக் காரணம் பௌத்தம்தழுவிய சிலர் மெள்ளமெள்ள நல்லொழுக்கமுநழுவி நிரீச்ரவாதம் புகுந்து தருக்கியதேயாகும். இந்நிலைகண்டு அவர் தன்மனந்தனை மீண்டும் ஆராய்ந்தார். குணத்தை மாத்திரம் போற்றிக் குணியையோ மறுத்துவிடுவது அவரதுதர்க்க நியாயத்திற்கு இணங்கவில்லை. ஆதலின், "குணத்தின் செயலால் குணியைக் காண்பதற்கு எக்கால மியலாமலாகி விடுகின்றதோ அப்பொழுதே அந்நெறிபுகுந்த மாந்தரது பார்வையில் பூப்படரலாகின்றதென ஓர்ந்து, கண்ணை முற்றிலும் இழந்து அறியாமையாகின்ற அந்தகாரத்துளழுந்தாமுன்னம் அழவழ வேனும் அப்புண்ணை யாற்றுதல் என் கருமமன்றோ' என்று பலகால் சிந்தித்தனர். சிந்தித்துப் பின், அப்பருக்குக் குலைநோய் தந்தே தடுத்தாட்கொண்ட சிவபிரானென்ன நம் அகிலாண்டேச்வர அடிகளும் புத்தமதம் பற்றியோரை ஒரு சிறிது தண்டிக்க[illegible]துவக்கினார். தண்டனையோ வெகு கடுமையன்று. மடத்தைச் சேர்ந்த வித்தியார்த்திகள் சீடர்கள் துறவிகள் யார்பேர்லேனும் புத்தமதத்தைச் சார்ந்த மனத்தினர் என்னும் சந்தேகம் ஏற்படுமானால் அத்தகையவர் அன்றே விலக்கப்படுவர். வினைவர் சாதிப்பிரஷ்ட மதப்பிரஷ்டர்களாகிக் கூட்டுறவு நலம்இழந்து அந்நிலைக்குரிய தொல்லைகளுக்காளாவதே அவர் விதித்தமதச்சட்டத்தின்எல்லையாகும்.

விதியினளவு எளியதாயினும் என்ன! அதைக் கையாளும் அதிகாரிகள் சரிவர நடத்திவைத்தல் சுலபமன்று. இது மனப்பான்மையைப் பொருந்திய குற்றமாதலால் வெளிச்செய்கை யில்லாமலே பழிசார்வதற்கு இடம் தந்தது. புறங்கூறிப் பொய்க்கரி புகன்று இச்சட்டத் தாரையில் தன் தனிப்பகை முடித்தற்குத் துணியும் பாதகர் பலர் காந்தார நாட்டிலிலரேனும், மடத்ததிகாரிகளது ஆர்வத்தால் சந்தேகமெல்லாம் நிரூபித்த குற்றம்போன்றே தோன்றத் தம் மதத்தில் விடாப் பற்றுடைய பலரும் இரகசியமாய்ப் புத்தமதச் சார்புடையவர் எனக் கருதப்பட்டு இச்சட்டத்திற்கு ஆளாகிப் பெரிதும் வருந்த நேரிட்டது. இஃதுணர்ந்தார் மடாதிபதி அகிலாண்டேச்வரர். அன்றியும் அவரிட்ட தண்டனை விதிகள் ஆண்டு பல நிலவியும் புத்தமதப் பற்றெங்கும் குறையக் காண்கிலர். தண்டனை மூலமாய் யாரையும் நல்வழி கொண்டுவர இயலாதென்னும் தத்துவமும் அவருக்கு வெட்ட வெளியாயிற்று. 'எல்லாம் ஈசன் செயலன்றோ' என்றெண்ணி இவ்விதிகளையும் விலக்கிவிடக் கருத்துட் கொண்டார். அந்தச் சமயம் ஆதியிலவரை ஒறுத்துத்தடுக்குமுறை கடைபிடிக்கத் தூண்டிய புத்தமத துவேஷிகள் மறுபடியடைந்து அம்முறை இதுவரையிற் பயன்படாது போனதற்குக் காரணம் அந்த விதிகளின் சுலபமே யென்றும், இன்னும் கடிய தண்டனைகளைக் கையாள்வதே சிறந்த சூழ்ச்சியாகு மென்றும்சொல்லிச், 'அட்டமொன்று இருப்பது பயத்திற்கோ பரிகரத்திற்கோ ?,' வென்று கேட்டனர். "முறையிற் பிழையில்லை, மருந்துதான் போதாது" என வற்புறுத்தினர். மடாதிபதி, "கொடுத்த வளவிலேயே இம்மருந்து நோயை நீக்காததுடன் நல்லோரையும் பீடிக்கலாயிற்றே" என எவ்வளவுதான் தடுத்துக் கூறியும், அது சமயப்பற்றால் துக்கிருந்த அச்சமயிகள் செவியில் புகுந்ததில்லை. அவர் சொல்வதும் இவர் தடுப்பதுமாய்ச் சில காலம் கழியக் கடைசியில், "பௌத்தரசை நம்மடாதிபதிக்கும் அந்தரங்கத்தில் உளதுகொல்,' எனக் கேட்பதுபோல் சில வம்பர் அவதூறு பேசலாயினர். இவ்வபவாதம் அவர் செவிதனில் எட்ட அழல்படு மெழுகென உள்ளங் கரைந்துருகிச் செய்யும்வகை துணியலாற்றாது சிந்தனையுள் ஆழ்ந்திருக்கும் சமயம், அரசற்கிளையோன் வீராடபத்ரன் வந்துசேர அவனிவரொடு அளவளாவி விஷயமுணர்ந்து அவர்தமக்குற்ற வசையையும் பிறமதப் பெருக்கையும் ஒருங்கே யகற்றற்கு வன்மையாலன்றி வேறு வழியில்லை என்று சாதித்துச் சிரச்சேதம் வரையில் தண்டனை விதித்தற்கான விதிகளை அரசனதாணைபெற்று அக்கணமே நிறுவ எவினன். அவ்விதம் செய்வதற்கு நம் அருள்திறம்வாய்ந்த உத்தமர் ஒருவாறு கருதினரெனினும் கொலைத்தண்டனை யளவுபோக ஒருப்படாமல் புத்தமதப் பற்றுடையோரைத் தேசப்பிரஷ்டர்களுமாக்கி அவர்களது நிலதன தான்யாதிகளை மடத்திற்குச் சேர்த்துவிடுதலே தகுதி எனக் கொண்டவராயினர். எனினும் அரசனது அனுமதியின்றி இவ்வண்ணம் விதிக்க அவருக்கு அதிகாரமில்லை. ஆதலால் விச்வகேசரியினது ஆணைவேண்டி அவர் ஓர் நிருபம் விடுத்திருந்தார். எம்மருங்கும் புண்பட்டிருந்த அரசன் இவ்விதிக்குத் தரியாது பின்னும் மனங்குலைந்தான். ஒருசார் குடிகளது மதவுரிமைக்குத் தீதுசெய்ய இசைந்திலன். மறுசார் மடாதிபதி வேண்டுவதை மறுக்கப் பயந்தனன். "இம்மைக்காவன ஆக்குவிக்கும் புவியரசும் மறுமைக்குறுவன முடித்துவைக்கும் மதக்குருவும் இருமனப்படுவரேல் நீ காக்கும் நாடு என்னாகும் காண்," என்று வீராடபத்ரனும் விடாது ஓதுவான். இந்த விஷயத்தில் வீராடபத்ரன் ஊக்கம்கொண்டது, வேறெது கருதினனேனும், மதப்பற்றினாலன்றென்பது மாத்திரம் உண்மை. அரசன், தம்பி எடுத்துக்காட்டிய தத்துவம் சிறந்ததென்று கொண்டானாயினும் மடாதிபதியின் கருத்திற்குத்தான் நேர்வதை விடுத்து அன்னவரைத் தனது கருத்திற்கே இணங்கச் செய்யினும் ஒருமனப்பட்டவராவோமன்றோ என்று துணிந்து தானே நேரா

கச்சென்று அப்பெரியோரை இக்கடுவிதியைத் தன்பால் வேண்டாது மறக்க இரப்பதே தக்கதென்றுன்னினான். உன்னியவாறு செய்யவே தன்னகர்விட்டு இவ்விரதி பௌர்ணமிக்கு இருதினங்களுக்கு முன் இரத்தினபுரியை யடைந்து இதுபோது அகிலாண்டேச்வரசுவாமிகள் பீடமமர்ந்த மடத்தின்கண் விச்வகேசரியாசன் உறைதரலாயிற்று.

விச்வகேசரிக்கு அருந்தவப் புதல்வன் சித்ராங்கன் என்பான் காந்தாரநாட் டிளவரசன். இவன் அழகிற்கு ஓர் அணிகலனாகி இளமை கிளர்ந் தொழுகு குளிர்ந்த முகமும் பெருந்தகை நிறைந்ததொரு சிறந்த மனமும் பெற்ற பெற்றியன். எனினும், தன் அரசத் தந்தையாற்றும் புவிப்பொறையை இவன் ஒரு சிறிதும் வகுத்தேற்றுத் தாங்காமல் அது பெரும் பகுதி சிற்றப்பன் கைப்புகுந்திருந்தது வியப்புமன்று. ஏனெனில், சிறிது காலமாய்ச் சித்ராங்கன் பொறுப்பற்ற கருத்தோடு சிற்றின்பத் துறைபாய்ந்து களியாட்டயரும் காமுக ரருகுசூழ எஞ்ஞான்றும் தன் வாழ்வெலாம் வீணிலே போக்கித் திரிவதொரு தொழிலையே மேற்கொண்டு ஒழுகுமதையரசனுணர்ந்து அன்னான் அரசியல் ஆட்சியில் அணுகவு மஞ்சி விடுத்துத் தன் தம்பியாம் துஷ்டன் விராடபத்ரனையே ஊன்றுகோலெனக் கொண்டு செங்கோல் பாரத்தைத் தாங்கலாயினன்.

சித்ராங்கனுக்கோ மணவினையும் முடிந்திருந்தது. விவாகமாய பின்னும் நலங்கெட்டுக் காமுகனாய் நடப்பதோ எனப் பிரஜைகளுள் பலர் அவனைச் சினந்தனர். சிலர், இளவலினது நேரற்ற எழிலிலும் பூரித்த பருவத்திலும் வாயுற்ற நகைதனிலும் நயமுடைய வாக்கினிலும் வயப்பட்டுப் போயினராய், தமது அண்ணல் இயற்கையில் நற்குண முடையோனென்றும், காமுகனாயதற்கும் கட்டிவைத்த மணவினையே காரணமாயிற்றென்றும் மதித்துச் சொல்லினோரும் இருந்தனர். இக்கூற்று பெரிதளவு உண்மையே. சித்ராங்கனுக்குப் பெண்தேடி வாழ்க்கைப்படுத்தியது சிற்றப்பன் என்றபின் வேறெதுவும் எடுத்தோத வேண்டியதில்லை. இராஜ தந்திரங்களின் பலாபலன்களையே கருதிக் கலியாணம் நடந்ததே யல்லாமல் இளவரசன் காதலிற்கும் இவ்வினைக்கும் சம்பந்தமுண்டாக இடமில்லாமல் போயிற்று.

காஷ்மீரத்திற்கும் காந்தாரத்திற்கும் குலப்பகையொன்று ஓய்வின்றி இடையிருந்து வந்தது. காந்தாரத்தையும் வென்று தமது ஆளுகையின்கீழாக்குவதே கண்ணும் கருத்துமாய்க் காஷ்மீரத் தரசர் எந்நாளும் முயன்று கொண்டிருந்தனர். இதுபற்றி அவர் பலதரம் படையெடுத்துப் புகுவதும் இவர் சிற்றரசர்துணைகொண்டு முதுகிடத் துரத்துவதுமாகவே தலைமுறை தலைமுறையாய்க் கழியலாயிற்று. இக்காலம் காஷ்மீரத்தவர் பெரியதோர் படைப்பிரயத்தனம் செய்வாராயினர். அதைத் தடுப்பது எங்ஙனமெனும் கவற்சி விச்வகேசரிக்கும் அவனது மந்திரி பிரதானிகளுக்கும் இடைவிடாது உறுத்தி நின்றது. காந்தாரத்துள்ளடங்கிய சிற்றரசர் கைவிடுவாராயினும் பகைவனைச் சேரினும் பின விச்வகேசரி வெற்றி காண்பது இயலாது. எனவே அன்னவர் துணைநலத்தைப் பெற்றடைய வேண்டியது கடன். மணிவாளன் கஜேந்த்ரஸிம்மன் என்போர் மன்னரிருவர் மிக்க படைவலியும் போராற்றலும் உடையராயிருந்தனர். மணிவாளனது நாடு காந்தாரத்திற்கும் காஷ்மீரத்திற்கும் இடையே உள்ளதாதலால் அதைக் கடக்காமல் காந்தாரத்துள் காஷ்மீரத்தன் காலடி எடுத்துவைத்தற்கில்லை. ஆதலால் அவனது உறவு இன்றியமையாததுணர்ந்து விச்வகேசரி மன்னவன் அவனருந் தவப்புவில்ல மாலினியைச் சித்ராங்கனுக்கு மணம் வேண்டினான். மாலினி திருமகளுக்கு நிகரான பேரழகுடையவள், நாமகளன்ன கலைகளும் வல்லாள். சித்ராங்கன் ஒருகால் மணிவாளனுடன் விருந்தினுக் கிசைந்தபோது அன்னவளைச் சந்திக்க இருவருக்கும் ஒத்த காதல் உதித்து வளர்வதாயிற்று. எனவே இருவர் தந்தையும் இம்மணத்திற் குடன்பட்டு 'ஓம்' என்றனர். கடிமணம் புரியும் நாளும் திட்டமாய் விட்டது. எனினும் என்! விராடபத்ரன் சூழ்ச்சிக்கு இது ஒவ்வாதாயின் இடையூறின்றி நடைபெறுவதெங்ஙனம்!

மணிவாளன் ஆற்றலிற்கேற்ற வாய்மையும் வாய்ந்தவன். எனவே அத்தகை யொருவன் அரசனுக்கு உறவினனாயமைந்தபின் தன் பேரவா சிறிதும் பயன்படாதென்பது விராடபத்ரனுக்கு விளங்கிவிட்டது. தானுந் தன் சந்ததியும் காந்தாரநாட்டு அரசபட்டத்தை வௌவக் கொண்டிருந்த மனத்துள்ளூறிய பாலெல்லாம் அன்றே வற்றும் என்பதற்கு ஐயமில்லை. மற்றென் செய்வது! எவ்வகையிலேனும் இத்திருமணம் நிறைவேறாது போகச் சூழ்வதே அவன் கடனாயிற்று. மணிவாளனைப் பற்றி மன்னனிடம் பலவாறு பொய்யும் பழியும் புகன்று பார்த்தான். மாலினியின் பேரிற்கோர் இழுக்குண்டு, என்றான். ஒன்றும் பயன்பட வில்லை. சாமத்திற்கிணங்கவில்லையாயின் பின் பகைகொண்டு மருட்டலே தகுதி எனத்துணிந்து விராடபத்ரன் கஜேந்த்ரஸிம்மனிடம் விரைந்து நாடிக் "கஜேந்திரஸிம்மா, என்னே உன் பெருமை இருந்தவாறு. நிகரற்ற போராற்றல் படைத்துளாய் நீ யிருக்க, தனிப் பேரழகள் நின் புதல்வி மந்தாகினிதா னிருக்க, நின் பெருமைக்கும் ஊனமாய் அவளழகிற்குமோர் பெரும் பழியாய், நமதரசன் அவ்விழிகுல மணிவாளன் மகள் மாலினியைச் சித்ராங்கனுக்கு மணமேவிப் புகுகின்றானே! இந்நிந்தனை தாங்கியும் வாளா விருக்க வல்லையோ, ஒரு நீ!" என்றின்னபல இடித்துரைத்தான். கஜேந்த்ரஸிம்மனோ மகா மூர்க்கன். தானெனும் பேய்பிடித்தாடுபவன். எனினும் அவன் தீயனுமல்லன், வஞ்சனுமல்லன். அவன் மற்று, பாதகச் சூழ்ச்சிகளுக்குச் சம்மதியான் என்பதும் விராடபத்ரனுக்குத் தெரியும். இருப்பினும் மானுட இயற்கையில் நன்று பயின்றுள இக்கபடனிற்கு மூர்க்கனொருவனை யவனறியாமலே தீச்செயலுள் பாய்ச்சுவது சுலபமென்பதும் தெரிந்திருந்தது. ஆதலால் கஜேந்த்ரஸிம்மனே தனக்கேற்ற துணைக்கருவியெனத் திட்டம் செய்துகொண்டான்.

விராடபத்ரன் கூறியது கேட்ட கஜேந்த்ரஸிம்மன் அந்நாளே தன் நாட்டைவிட்டுப் புறப்பட்டு விச்வகேசரியின் இருக்கையை யெய்தித் தன் மகளையே சித்ராங்கனிற்கு மணங்கொள்ள நயத்திற் சிறிதும் பயத்திற் பெரிதுமாய் வேண் வற்புறுத்தினன். மணிவாளனிற்குக் கொடுத்துள வாக்கைப் பிறழவோ மன்னனுக்கு மனம் வரவில்லை. மேலும், அவனை வெறுக்கின் காஷ்மீரத்தவனுக்கு வழிதிறந்தாய்விட்டது. மற்றிக் கஜேந்த்ரஸிம்மன் விரோதியானாலோ என்செய்வது! இவனனைய தறுகண் வீரர்களைத் துறந்தபின் பகைதனைத் தனியாய் எவ்விதம் வெல்வதும் கூடுமோ! காஷ்மீரத்தான் ஒருபக்கம் உறுமிக்கொண்டு கிடக்கின்றானே! இவையலாது தனதுயிரினு மினிய அருந்தவப் புதல்வனது ஆசையெல்லாம் பாழாக்கிவிடுகின்றதோ. இனிப் புத்திரன் பகையுமா தேடிக்கொள்வது. பேதை மாலினி என்னாவாள்! இருவர்தம் வாழ்வையும் பாழுமிப் பாராளும் புணர்ப்பிற்கே பலியாக்கவோ கடவுளே!" என்ற பலவெண்ணங்கள் பிடித்தாட்டப் புயல்படு பூச்சியெனப்



பேதுற்று முகங்கவிழ்ந்திருந்தனன், காந்தாரநாட்டு முடிகவித்தமன்னவன் விச்வகேசரியாம் மன்னற்கு மன்னவன். பிறருள்ளியதை அவர் யுரையாமலே உணரவல்ல விராடபத்ரன், "அரசே, அடியேன் முன்பிறந்த அண்ணலே, தயங்கேல். நின்மகன் என்மகனல்லனோ! மனம் போன போக்கெல்லாம் போகும் நம் சித்ராங்கன் மாலினியின் காதலினின்று பிரிவதற்கு எந்நேரமாகும்! மந்தாகினியைக் காணாதவரையில்தான் அவன்மாலினியைக் கொண்டாடுவதெல்லாம். மன்னவா, குடிகளைக் காக்க இருக்கும் நீ அக்காஷ்மீரத்தவன்பால காட்டிக்கொடுத்துவிடுவது நீதியோ! அவன் படை எழுந்துவருங்கால் மணிவாளன் ஏது செய்வான். அண்ணா, கஜேந்திர ஸிம்மத்தைக் கைவிட்டு இம்மணிவாள முயலைத் துணைக்கழைப்பது மூதறிவாமோ. யானுமிந்த இராஜ்யத்தில் கருத்துடையவன் அன்றோ!" என்றனன். கடைநின்ற வாசகம் உண்மையே உண்மை யென்பதில் எள்ளளவு ஐயமும் வேண்டா. மூப்பினால் உடலொடு மனமுந் தளர்ந்த மன்னவன், "எதுவேனும் செய்யுங்கள்" எனக் கையற்றியம்பிப் பெருமூச் செறிந்தோய்ந்தான்.

T. N. சேஷாசலம்.

# சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

## பொருள் ஆராய்ச்சி.

(முன் தொடர்ச்சி—பக்கம் 105)

### சுவை கோடல்.

சொக்குமாந்தடி:—சுவையாவது யாது என்பதையும் ஒருவகையாக அறிந்தோம். அது நமக்கு எவ்வகையில் பயன்படுகின்றதென்பதையும் உணர்ந்தோம். கதையைக் காணும்போதும் கேட்கும்போதும் கதையிலே அழுவாரோடு அழுகின்றோம். களிப்பாரோடு களிக்கின்றோம். வியப்பாரோடு வியக்கின்றோம். வெகுள்வாரோடு வெகுள்கின்றோம். கதையில் வருவாரது கருத்திலே கருவாகி உருப்பெற்ற உள்ளக்குறிப்பு நமது உள்ளத்திலே புகுந்து ஒன்றுபடும் முறைதான் என்ன? ஓடாவி சில கோடுகளைக் கிழிக்கின்றான். சில நிறங்களைத் தெறிக்கின்றான். இந்தக் கோட்டையும் நிறத்தையும் கண்டு, கதறியழுகின்றோம், களித்து மகிழ்கின்றோம் சினந்து சீறுகின்றோம், சிதைந்து வீழ்கின்றோம். பாவாணன், பாதன் என்றும் படுதுயர் என்றும் சில சொற்கள் சொல்கின்றான்; கண்ணீர் ததும்பிக் கலங்கி நிற்கின்றோம். இந்தக் கோடும் இந்த நிறமும் இந்தச் சொல்லும் இவ்வாறு செய்வது எதனாலோ? பாவலனின் எழுதுகோலும் ஓடாவியின் தீற்றுகோலும் சொக்குமாந்தடியோ? இந்தக் கண்கட்டி வித்தையை எவ்வாறு அறிந்து கொள்வது? இதனைச் சுவை கோடல் என்று பழந்தமிழர்கள் ஆராய்ந்து வந்தனர்.

பட்டலோல்லடர்:—எந்த ஆராய்ச்சியாயினும் சில பொதுவானபடிகளின்மேல்ஏறிச் சென்றுதான் உண்மை நிலையை அடைகின்றது என, மேலே எடுத்துக் கூறினோம். கடவுளைப்பற்றி ஆராய்வார் கண்டஉண்மைகளைப் பின்பற்றிப் பாட்டினைஆராய்வார் தமது சுவையாராய்ச்சியைத் தொடங்குதலும் வியப்பன்று. மீமாம்ஸகர் நையாயிகர், சாங்கியர், வேதாந்திகள் என்று பலவகையாராகப் பிரிந்து கடவுளைப்பற்றி ஆராய்ந்த கொள்கைகளைப் பலவகையாக விளக்கி விரித்துரைப்பது போலச் சுவையினைப்பற்றி ஆராய்வாரும் பலவகையாக விரித்துரைக்கின்றனர். மீமாம்ஸகர்கள், மறைகள் கூறிய வண்ணம் வேள்விமுதலியன செய்தொழுகினால் மேலுலகில் இன்பம் பெறலாம் என்கின்றார்கள். இவ்வின்பத்தை எமக்கூட்ட இறைவனோ மற்று எப்பொருளோ இருக்க வேண்டுவதில்லை. வேள்வியே மேலுலகம் தரும் மேன்மை புடையது. வேள்வியே முதல், மேலுலகமே அதன் செயல். தீக்கடைகோலைத் தேய்த்தபோது தீப்பொறி பறப்பதுபோல வேள்வி வேட்டபோது மேலுலகம் விளைகின்றது. வேறொன்றும் வேண்டுவதில்லை. வேள்வியின் நிழலே மேலுலகம். யக்ஞாதி வேதவிகித கர்மங்கள் காரணம் என்றும், ஸ்வர்க்கம் காரியம் என்றும் பூர்வமீமாம்ஸகர்கள் கூறுவதுபோலப் பட்டலொல்லடர் முதலானோர், விபவம் காரணம் என்றும் ரஸம் அதனின்காரியம் என்றும், கூறுகின்றனர். முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் என்ற இவை உள்ளஇடத்தில் சுவை பிறக்கின்றது. முதற்பொருள் முதலியவற்றை நேரே கண்டபோது நமதுஉள்ளம் உருமாறி நிற்பது உலக இயல்பே. ஆனால் கதையிலே பொருள்களை நேரே நாம் காண்பதில்லையே? காணாதிருப்பவும் கண்டதுபோலக் களித்தும் கதறியும் கதைகேட்டுப் போவானேன்? வேண்டும் என்றாலும் வேண்டாம் என்றாலும் நெருப்புத் தொட்டவரைச் சுட்டேவிடுகின்றது. வேள்வியானது மேலுலகைத் தந்தே விடுகின்றது. உள்ள நிலையைப்பற்றி ஒன்றும் உணர்ந்தறிய வேண்டுவதில்லை. அஃதேபோலக் கூத்தினுள்ளும் முதற்பொருளும் கருப்பொருளும் உரிப்பொருளும் கண்டபோதே சுவையும் பிறக்கின்றது. கூற்றும் நிலையும் விறலும் என்ற மூன்றுமே நமக்கு வேண்டியவை. அவர்களது உள்ள நிலையைப்பற்றி ஆராயவேண்டுவதில்லை. ஸ்தாயிபாவம் என்று சொல்லப்பட்ட குறிப்பு, கதைக்குத் தலைவனிடத்தே காணப்படும் என்பது உண்மையே. அக்குறிப்பு, கூத்தில் வரும் பொருநனிடத்தில் இல்லை என்றால் சுவை இல்லாமற் போவதில்லை. கூற்றும் நிலையும் விறலுமாய் எழுந்த முதற்கருஉரிப் பொருள்களை எங்கேனும் கண்டவிடத்து அங்குக் கண்டவர் மனம் சுவையினைக் காண்கின்றது. இவ்வாறு விரித்துரைக்கின்றனர் பட்டலொல்லடர் முதலானோர்.

சங்குகர்:—"போலியாக உள்ள பொருளானது உண்மையாக உள்ளதுபோலச் சுவையை விளைவிக்குமோ?" என்பதே கேள்வி. திருப்பணி செய்ய வேண்டித் தேங்காய் கொண்டுவரத் தென்னைமரத்தின் மேலேறிய சிறுவன், சிறிது இடறிக் கீழ்வீழ்ந்து சிதறுண்டு செத்தாளும். இதனை நேரே கண்டவர் மனம் என்ன பாடுபட்டிருக்கும். இதனையே கதையில் கண்டால் மனம் அவ்வாறு மாறுமோ? அக்கூத்தினைப் பார்க்கும் அத்துணைப் போதும் அவன் இறக்கவில்லை என்ற எண்ணம் நம்மைவிட்டுப் போவதில்லையே. ஆனையை நேரில்கண்டால் அஞ்சி யோடுகின்றோம்; முன்னழகு காட்டி நின்றவர்கள் பின்னழகு காட்டி ஓடுகின்றனர். ஆனால் வள்ளியம்மை கதையில் வருகின்ற ஆனையைக்கண்டு அஞ்சுவார் யார்? தலைவனிடத்தெழுந்த உள்ளக்குறிப்பானது கூத்தாடியிடம் இருப்பதாக எண்ணுவதேன்? இக்குறைபாடுகளைக் கண்ட சங்குகர் முதலாயினோர் நையாயிகரை ஒட்டி அநுமான

வாயிலாகச் சுவையினை அறிகின்றோம் என்கின்றனர். நையாயிகர்கள் பொருள்களை அறிந்துகொள்ளும் முறையில் உய்த்தறிதலே சிறந்த தென்பார்கள். 'விபவாநுபவ வ்யபிசாரி ஸாம்யோகாத் ரஸா நிஷ்பத்திதி." "முதற் கரு உரிப்பொருள்கள், நிமித்தம் குறிப்பு என்றவற்றின் கூட்டத்தால் சுவை விளைகின்றது' என்று பரதர் கூறியதை முன்னரே குறித்து வைத்தோம். இதில் வரும் "நிஷ்பத்திதி" "விளைகின்றது" என்பதற்குப் பட்டலொல்லடர் முதலானோர் "உண்டாகின்றது" என்று பொருள் கொண்டனர். சங்குகர் முதலியோரோ "உய்த்தறியப் படுகின்றது" என்று பொருள் கண்டனர். புகைகண்ட வழி நெருப்புண்டு என்று உய்த்துணர்தல்போல முதற் கரு உரிப்பொருள்களைக் கண்டவழி, சுவையினை உய்த்துணர்கின்றோம் என்றனர். கதையில் வரும் தலைவனும் கூத்தில் வரும் பொருநனும் வேறு என்ற நாம் எண்ணுவதில்லை. அஃது எதனாலே. ஒற்றுமையால்? இவ்வொற்றுமை என்பதற்குக் கூத்துநூலில் ஒரு தனிப்பட்ட பொருள் உண்டு.

நாடகசாலையுள் நடிக்கப் புகுந்தோன் எடுத்துக் கொண்ட பாத்திரம்தன்னில் தான்வேறு என்னும் தனிநினைவு இன்றி அவனே தானே ஆகிய அந்நெறி ஏகன்ஆகி இயைந்திடும் உடையும்ஒன்றி இலங்குவது ஒற்றுமையாகும். இதுவே ஒற்றுமையாகும். தீயிற் பழுக்கக்காய்ச்சிய இருப்புண்டை நெருப்பும் இருப்புமாய்த் தாதான்மிய சம்பந்தம் (ஒற்றுமைத் தொடர்பு) பெற்று விளங்குவதுபோலப் பொருநனும் தலைவனும் ஒற்றுமை பெற்று விளங்குகின்றனர். நெருப்புக்கு உருண்டை வடிவம் இல்லையாகவும் இரும்பில் இருப்பதனை இதன் மேலேற்றி நெருப்புருண்டை என்கிறோம். இரும்பினுக்குச் சூடு இயற்கையில் இல்லையாகவும் நெருப்பில் இருப்பதனை அதன்மேல் ஏற்றி இரும்பு சுடுகின்றது என்கிறோம். இதுவே ஒற்றுமைத் தொடர்பு. இவ்வொற்றுமைத் தொடர்பினால் பொருநனிடத்துள்ளவற்றைத் தலைவனிடத்துள்ளனவாகவும், தலைவனிடத் தெழுந்தவற்றைப் பொருநனிடத் தெழுந்தவையாகவும் எண்ணிவிடுகின்றோம். ஆனால் இங்கெழும் அனுமானம் மற்றைய அனுமானங்களுக்கு வேறாகும். சங்குகர், சித்திரதுரகநியாயம் போன்றதோர் அனுமானம் என்பர். இந்த ஓவியக் குதிரையின் கதைதான் என்ன? ஓவியத்தில் குதிரையின் வடிவம் வரையப்பட்டிருப்பது கண்டு அதில் காணப்படும் சில வரிகளைக் கொண்டே உலகில் உயிருடன் ஓடும் குதிரையை உய்த்துணர்தல்போல முதற் கரு உரிப்பொருள்களின் முதற்குறிப்புகளாகக் கூத்தில் வருவனவற்றைக் கண்டு சுவையினை உய்த்துணர்கின்றோம் என்பர். ஆனால் நேரே கண்ட பொருளைப் போல உய்த்துணர்வுவாயிலாக அறிந்த பொருள் அத்துணை சுவை நிரம்பிய தாகுமோ? ஆகாதன்றே,

**பட்டநாயகன்:**—இக்குறைபாட்டினை அறிந்த பட்டநாயகன் முதலாயினார் உண்மையினை அறியவேண்டிச் சாங்கியர் கொள்கையினைப் பின்பற்றி ஆராயப் புகுந்தார்கள். வீட்டின்பமானது புறத்தே உள்ள பொருள்களைப் பற்றியதல்ல. உள்ளுக்குள்ளே ஒளிர்வது என்கின்றனர் சாங்கியர். பட்டநாயகன் முதலியோரும் புறவாராய்ச்சியை விட்டொழித்தே உள்ளத்துள்ளே புகுந்து சுவையினை உணர்கின்றனர். ஒவ்வொரு சொல்லும் முதன் முதலில் ஒவ்வொரு பொருளினை, முறையே வெளிப்படையாகவேனும் குறிப்பாகவேனும் உணர்த்தி நிற்கின்றது. இவ்வாறு பொருள்படு நிலையை அபீதா என்பர். ஒரு சொல் ஒரு பொருளுக்குக் குறியீ டாகின்றது. இரண்டாவதாக ஒவ்வொரு சொல்லும் தான் குறிக்கும் பொருளை எல்லோரும் அறிந்தவகையில் பொதுவாக உணர்த்துகின்றது. இதனைப் பாவகத்வம் என்பர். இஃதே பொதுஉணர்ச்சி. முன்னே காட்டியது சிறப்புணர்ச்சி. குதிரை என்று நான் என் கண்ணெதிரே உள்ள பொருளைக் கூறுகின்றேன். அப்பொருளை அச்சொல்லும், அதன் பல சிறப்பியல்புகளோடு சுட்டி நிற்கின்றது. குதிரை என்ற சொல்லைப் பிறர் எல்லாம் கேட்டால், நான் கண்ட குதிரையின் உருவமும் வடிவமும் அவர்களது உள்ளத்தே வருவது இல்லை. ஆனால் பொதுவாகக் குதிரையின் உருவம் உள்ளத்தே உருப்படுகின்றது. ஒரு சொல், பொருளையோ, இடத்தையோ, பொழுதையோ பண்பையோ, தொழிலையோ, உணர்த்தினும் அதன் பொதுஉணர்ச்சி ஒவ்வொருவர் உள்ளத்திலும் உண்டாகின்றது. கதையைக் காண்போரும் கேட்போரும் இந்தப் பொது உணர்ச்சி வாயிலாக பாவலன் கண்ட திருவுருவைக் காண்கின்றனர். இவ்வாறு பொதுஉணர்ச்சி வாயிலாக நாம் உணர்ந்த பொருள் உள்ளத்தே இன்பத்தை ஊட்டுகின்றது. இதனைச் சொல்லின் போஜகத்வம் என்பர். இஃதே பொதுநுகர்ச்சி. யான் ஒருவகையான கொடிமுந்திரிப் பழத்தைத் தின்று இனிக்கின்றதென இன்புறுகின்றேன். யான் நுகர்ந்த இன்பத்தினையே கொடிமுந்திரிப்பழம் தின்பார் எல்லாரும் நுகர்வதில்லை. ஆனால் யானும் மற்றையோரும் நுகர்ந்த இன்பம் ஒன்றாகாவிடினும் ஒரு தன்மையனவே என்பதில் என்ன ஐயம். கொடிமுந்திரிப்பழம் தின்றால் வரும் இன்பத்தைக் குவளைப் பூவைக்கண்டால் வருவதில்லை. இந்தப் பொதுநுகர்ச்சி ஒன்று இருப்பதனால்தான் பாவலன் துய்த்த சுவையைப் படிப்பவர் எல்லாம் சுவைக்கின்றனர். இவ்வாறு சுவையுணர்ந்து துய்க்கும் இன்பம் வெறும் நினைவல்ல; வெறும் நுகர்ச்சியும் அல்ல. உள்ள தன்உணர்வே ஆகும். அந்நிலையில் உள்ளம் உருகி ஒன்றாய்ப் பரவுகின்றது. சாங்கியர் சொல்லும் வீட்டின்பம் போன்றுள்ளது சுவை நுகர்ச்சி. ஆனால் சுவை நுகர்ச்சி வீட்டின்பத்தைப்போல உள்ளத்தையும் கடந்து நின்று ஒளிர்வதல்ல. அவ்வளவே வேற்றுமை.

**த்வனிகாரர்:**—த்வனிகாரர் முதலியோர் இதனை இன்னும் விரித்துரைத்துள்ளனர். சொற்கள் தமது பொருளைக் குறிப்பாலும் வெளிப்படையாலும் உணர்த்துகின்றன. பாவலன் கையில் அச்சொற்கள் அருமையானமையாகி அழகிய உலகங்களை எதிர்கொண்டு வந்து காட்டுகின்றன. பாவலனது உள்ளுணர்வின் ஆற்றலால் உயரிய பொருள்களை வெளியிடுகின்றன. இவ்வாறு வருவதை "த்வனி" அல்லது உள்ளுறை என்பர். அதுவே பாட்டுக்கு உயிர்நிலை. உள்ளக் கிளர்ச்சியை ஓங்கி எரியப்பண்ணுவது உயர்ந்த பாடலே யாகும். ஆனால் அவ்வுள்ளக் கிளர்ச்சியைச் சொற்களைக் கொண்டே வெளிப்படையாக விரித்துரைக்க முடியுமோ? முடியுமானால் உள்ளமும் சொல்லுக்கு அடங்கி நிற்றல் வேண்டும். அதுதான் இல்லையே. உரையையும் கடந்த நிலையன்றோ உள்ள நிலை. கற்கண்டு தின்றால் நாம் நுகரும் இனிப்புச்சுவையை எங்ஙனம் எடுத்துரைப்பது? கற்கண்டு தின்பதனால்வரும் சுவையைக் கூறிக் குறித்துவிடுவோமானால் கற்கண்டினை முன்னர்ச் சுவைத்துள்ளோர் அனைவரும் அவ்வினிப்புச்சுவையினை அறிந்துகொண்டு நாவில் நீரூற இன்பமடைந்து நிற்கின்றனர். கற்கண்டினை உண்டறியாதானுக்கு இவ்வின்பத்தினை எவ்வளவுதான் விரித்துரைத்தாலும் எள்ளளவும் உணரமாட்டான். அஃதேபோலப் பாவலன் புனைந்துரைப்பதில் ஒரு சிறிதும் அறியாதவன் பாட்டினைப் பாடி



இன்பம் பெறுவதில்லை. சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும். ஆனால் பாவலர்கள் பாடுவது உலகினர் அனைவரும் உணர்ந்துள்ள உள்ளக்கிளர்ச்சியே யாதலினால் எல்லோரும் பாட்டுலக இன்பத்தில் மூழ்கித் திளைக்கின்றனர். சட்டியில் இருப்பதுதான் அகப்பையில் வருமானால் புலவன் காட்டும் புதுமைதான் என்ன? எல்லோரும் உலகைப் பார்த்துக் கொண்டேதான் பாரில் வாழ்கின்றனர். ஆனால் அதன் அழகை அறிந்தவர்கள் அரும்புலவர்களே. ஒரு தெருவழியே போய்க்கொண் டிருக்கின்றோம். இருபக்கமும் தோப்பும் துறவும், குயிலும் மயிலும் முல்லையும் குல்லையும், தென்றலும் தேனும் வழிநெடுக வனப்பும் மணமும் பண்ணும் பாட்டும், இன்பமும் இனிப்பும் தந்து நிற்கின்றன. வேலையில் நாட்டமாய் வேறொன்றும் காணமாட்டாது கடுநடையாய்ப் போகின்றோம். என்றாலும் நம்மையும் அறியாமல் அப்பொருள்களின் நிழல்கள் நமது உள்ளத்தே விழுகின்றன. இப்புதையலைப் பின்னொரு காலத்தே வெட்டி எடுப்பவன் பாவலனே யாகும். பேயாய் நிழலாய் ஒதுங்கி நின்றவை பெரியோரின் பாடல் கேட்டதும் பேருயிர்ப்பொருளாய் மாறிப் பேரின்பம் ஊட்டுகின்றன. இதுவே புலவன் செய்யும் புதுமை. என்றாலும் சட்டியிலிருந்ததுதானே அகப்பையில் வருகிறது. அறியாமையாகிய மறைப்பு நீங்கியதும் உள்ளிருந்த இன்பம் ஒவென்றெழுந்து ஒளிர்கிறது. ஒண்மொழிப் புலவர்கள் என உயர்ந்தோர் உள்ளுறையாலேயே இவ் வொப்பிலாப் புதுமையை எங்கும் எடுத்துக் காட்டுகின்றனர். ஆகவே த்வனிகாரரை உள்ளிட்டோர் 'நிஷ்பத்திதி;' என்றதற்கு 'உள்ளுறையால் குறிக்கப்படுகின்றது' என்று பொருள் கண்டனர்.

**பேராசிரியர்:**— தமிழர் சுவைகோடல் என்று ஆராய்ந்தபோதும் த்வனிகாரர் வந்த முடிவிற்கே வந்தனர் என்பதை இங்கே வற்புறுத்தவேண்டும். பேராசிரியர் "இவற்றைச் சுவைகோடல் என்பதென்னை எனின், நகையும் அச்சமும் முதலாகிய உணர்வு முற்காலத்து உலகியலான் அறிவான் ஒருவன், அவற்றிற்கு ஏதுவாகிய பொருள் பிற கண்டவழித் தோன்றிய பொறியுணர்வுகள் அவ்வச்சுவை எனப்படும்" என்று உரைத்துப் போதல் காண்க. அவ்விடத்தில் பேராசிரியர் முன்னறிந்த உணர்வினை வற்புறுத்துதலும் காண்க.

**உள்ளுணர்வு:**—பாவலன், நாம் முன்னரே புலனுணர்வால் உணர்ந்த முதற் கரு உரிப் பொருள்களை உள்ளுணர்வால் உணர்ந்து புனைந்துரைத்துப் போகின்றான். புலனுணர்வாக நமது மனத்தே புகுந்தவை ஒண்மொழிப் புலவனின் உரைவழியே உள்ளுணர்வாக நமது உள்ளத்திலும் உருப்பெற்று ஓங்கி எழுகின்றன. நகை முதலாகிய சுவைகளும் உரைவழியே உள்ளுறையால் உணர்த்தப்படுகின்றன. பொது உணர்ச்சியும், பொது நுகர்ச்சியும் அச்சுவைகளை நமது உள்ளம் நிறையப் பாய்ச்சி விடுகின்றன. கதையில் வரும் தலைவன் நுகரும் சுவையும் உள்ளக்குறிப்பும் நமது மனக்காதில் எதிரொலியாக வந்து ஒலிக்கின்றன. நமது மனக் கண்ணாடியில் அவற்றின் நிழலைக்கண்டு உணர்கின்றோம். உள்ளக் குறிப்பும் முதற் கரு உரிப் பொருள்களும் ஒன்றாகியபோது உள்ளுறைவழியாகச் சுவையினைத் துய்க்கின்றோம். நாம் சுவையுணர்ச்சியைத் தவிர வேறொன்றும் அந்நிலையில் அறிவதில்லை. சுவைதந்து நிற்றலே சுவையின் உயிர்நிலை. உள்ளக் குறிப்பு ஒரு சுவையல்ல. கதையைக் கேட்டோர் மனதிலும் கண்டோர்மனதிலும் கதையில் கண்ட உள்ளக் குறிப்பின் உயிர்நிழல் விழுகின்றது. அதனால் மனம் மாறியபொழுது பொங்கியெழும் உள்ளக் கிளர்ச்சியே நாம் சுவையுணர்ந்து துய்த்ததைத் தெளிவாக விளக்குகின்றது. உலகிலே பொருள்கள் முதற்பொருளும் வழிப்பொருளுமாய்க் காரண காரியமென்னும் தொடர்போடு விளங்குகின்றன. இத்தொடர்பு பாட்டுலகில் இல்லை. பாட்டுலகம் பெருவகையில் மண்ணுலகினும் வேறாகி அதனினும் உயர்ந்திருப்பதொரு பொன்னுலகம். உள்ளுணர்வால் ஒன்றுபட்டு விளங்கும் பல பொருள்கள்கொண்டு திகழ்வது. அப்பொருள்களுக்கு அங்குள்ள தொடர்ப்பாடுதான் என்ன? கண்டோர் மனதிலும் கேட்டோர் மனதிலும் உள்ளக்கிளர்ச்சியை எழுப்பிச் சுவையை ஊட்டும் தொடர்ப்பாடே யாகும். இஃது உள்ளுணர்வால் ஒன்றாகும் தொடர்ப்பாடாகும்; எனவே, முதற் கரு உரிப்பொருள்களை நாம் தனித்தனியாக உணர்வதில்லை. இவை எல்லாம் ஒன்றாக இயைந்து ஒருருப்பெற்று ஒரு சுவையாகி ஒளிர்கின்றன. மிளகும் கற்கண்டும் பச்சைக்கர்ப்பூரமும் இன்னும் பலவும் கொண்டு காய்ச்சிய குடிநீரானது, கலவைப் பொருள்களின் சுவை ஒவ்வொன்றையும் தனித்தனியே தாராது அவற்றிற்கு வேறாயதோர் ஒற்றுமைச் சுவையைத் தந்து நிற்பதுபோல. முதற் கருஉரிப்பொருள்களும் ஒன்றொன்றாகத் தனித்தனியே விளங்காது, ஒன்றுபட்டு ஒற்றுமையே உருவாய்ச் சுவைதந்து நிற்கின்றன. இது பற்றியே வடநூலார் அக்குடிநீரின் பெயராகிய ரஸம் என்பதனை இச்சுவைக்கும் பெயராக வைத்து வழங்கி வந்தனர்.

**சுவையுணர்வும் மெய்யுணர்வும்:**—த்வனிகாரரையுள்ளிட்டோர் வேதாந்திகளைப் பின்பற்றித் தம் சுவையாராய்ச்சியைச் செய்துவந்தனர். ப்ரஹ்மாஸ்வாதமும் ரஸாஸ்வாதமும் ஒத்திருக்கின்றன என்பர். எந்நாளும் தானாக விளங்கிய கடவுளைத் தானாக அறிவதே மெய்யுணர்வு. எந்நாளும் நம்முள்ளேயே பதிந்துகிடந்தசுவையினை உள்ளுக்குள்ளே ஒளிர்வதாக உணர்வதே சுவையுணர்வு. தானென்பது, அறியாமை என்னும் மறைப்பாகிய தடையால் வந்தது; அந்தத் தடை போனதும் வருவது மெய்யுணர்வு. சிற்றறிவினதாயும் சிற்றளவினதாயும் உள்ள சிறப்புணர்வு நீங்குவதே சுவையுணர்வில் தன்னிழப்பாம். பொதுவாக மக்கட்கெல்லாம் எழும் உள்ளக் கிளர்ச்சிஉள்ளொடுங்கி நிற்கின்றது. அவைநம்மையும் அறியாமல் உள்ளத்தே புகுந்தவை புலனுணர்வாய்ப் புதைந்துகிடப்பன. இவ்வறியாமை நீங்கியதும் குருமொழி போன்ற புலவனது பாடல்களைத் தானறிந்த சிறப்புணர்வால் அளந்துபாராது பொது வுணர்ச்சியால் உணர்ந்து பொதுநுகர்ச்சியால் துய்க்கும்பொழுது சிற்றறிவாகிய புலனுணர்வாக விளங்கியவை பேரறிவாகிய உள்ளுணர்வாக உருப்பெற்றதும் ஒருவன் உவகைக் கடலில் மூழ்குகின்றான். முதற் கரு உரிப் பொருள்களே தடையை நீக்கிக் கீழ்இருப்பதைத் தட்டி எழுப்புகின்றன. ஆகவே அவற்றிற்குத் தடைநீக்கிகள் (விக்நப்ரசாரகர்) என்று பெயர். மெய்யுணர்விலும் மெய்ப் பொருளாகிய செம்பொருள் அன்றி வேறொன்றின் உணர்ச்சியும் இல்லை. சுவையுணர்விலும் சுவையினைத் தவிர வேறோர் உணர்ச்சியும் இல்லை (விகலித வேத்யாந்தர:) அங்குப்போல் இங்கும் உணரப்படும் வேறெவற்றின் தொடர்பும் இல்லை, (வேத்யாந்தர ஸ்பர்சசூந்ய).

சிறப்பு நிலையில் எல்லாம் செம்பொருளாகத் திகழ்வதுபோல, அணி நிலையிலும், முதற் கரு உரிப்பொருள் என்றவையெல்லாம் சுவையாக ஒருருப்பெற்று ஒளிர்கின்றன. வீட்டின்பம் உண்டென்பதற்கு என்ன சான்று? சிறப்பென்னும் செம்பொருள் கண்டோன் துய்க்கும் இன்பமே சான்று. அஃதேபோலச் சுவை உண்டென்பதற்கும் உணர்வினின் வல்லோர் சுவையினை நுகர்ந்து நிற்பதே சான்றாகும் (ஸகல ஹ்ருதய ஹ்ருதய

ஸம்வேதன ஸாக்ஷிதாத்.) "அறிவை அறிவது பொருளென அருளிய பெருமானே" என்றதற்கிணங்க அறிவை அறிந்தோர் அதற்குரியர்; உணர்வினின் வல்லோர் இதற்குரியர். அறிவிற்கும் உணர்விற்கும் உள்ள வேற்றுமை யறிந்தன்றோ "உணர்வினின் வல்லோர் அணி பெறச் செய்வன செய்யுள்" என்று நன்னூலார் செய்யுளை உணர்வினின் வல்லோரிடம் ஒப்படைத்து விட்டார்.

அருமை:—சுவையே பாடலுக்கு உயிர்நிலையாதலினாலே அதை ஆராய வேண்டுவதாயிற்று. ஒரு கதையே பலரும் பலவகையாக நின்ற நிலைவேறுபாட்டாலும் நோக்க வேறுபட்டாலும் பலபடக் கூறும்போது அவற்றின் வேறுபாடு எல்லாம் சுவை வேறுபாடாக அமைதலின் இங்கு இவ்வாராய்ச்சி எழுந்தது. அதிலும் சுவையினை உய்த்துணர்தலின் அருமைபற்றி விரித்துரைத்தல் இன்றியமையாததாயிற்று. உள்ளுறை பொருளும் (வஸ்துத்வனி) உள்ளுறை அணியும் (அலங்காரத்வனி) தமது சொற்றொடரின் பொருளாற்றலால் வேறொரு பொருளையும் அணியையும் குறித்து நிற்பதனை யாவரும் எளிதில் உணரலாம். அவை எல்லாம் (ஸம்லக்ஷியக்ரமத்தால்) புலப்படுமுறையால் வேறு பொருள் உணர்த்துகின்றன என்பர். அஃதாவது அவை படிப்படியாக வேறு பொருள் உணர்த்தும் முறை முழுவதும் நமக்கு நன்கு விளங்கி நிற்கின்றது. ஆனால் உள்ளுறை சுவை (ரஸத்வனி) தோன்றும்பொழுதோ வெளிப்படையான பொருளினும் வேறாயதொரு சுவை குறிக்கப்படுகின்ற முறை நன்றாகப் புலனாவதில்லை. சுவையினைத் துய்த்து மகிழ்கின்றோமே அன்றிச் சுவை வநத வழியினை அறிகின்றிலோம். இதனைப் புலனாகாமுறை (அலம் லக்ஷ்யக்ரமம்) என்று கூறுவர். இதுபற்றியன்றோ தொல்காப்பியனாரும்,

> கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
> உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்
> நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே

என்று சுவையாராய்ச்சியின் அருமையைப் பாராட்டி மெய்ப்பாட்டியலை முடிக்கின்றார். அதனால்தான் இவ்வாராய்ச்சி அருகி வழங்குவதாயிற்று. ஆகவே, உணர்வினின் வல்லோரே உணர்ந்து துய்க்கும் உயரிய சுவையினை, அப்பெரியோர்கள் எவ்வாறு தாம் துய்ப்பதாக ஆராய்ந்து உற்றுநோக்கிக் கூறியுள்ளார்கள் என்பதனை இதுவரையும் ஆராய்ந்தோம்.

T. P. மீனாக்ஷி சுந்தரன்.

# தமிழ்ப் பாடம் 8.

## நள வெண்பா

(131-வது பக்கத் தொடர்ச்சி)

### சுயம்வர காண்டம்.

23. என்று நடங்கு மிடையென்ப வேழுலகு
நின்ற கவிகை நிழல்வேந்தே—யொன்றி
யறுகாற் சிறுபறவை யஞ்சிறகால் வீசுஞ்
சிறுகாற்றுக் காற்றாது தேய்ந்து.

பதப்பிரிவு :— என்றும் நுடங்கும் இடை என்ப ஏழு உலகும் நின்ற கவிகை நிழல் வேந்தே ஒன்றி அறு கால் சிறு பறவை அம் சிறகால் வீசும் சிறு காற்றுக்கு ஆற்றாது தேய்ந்து.

அன்வயம் :— ஏழு உலகும் கவிகை நிழல்நின்ற வேந்தே, அறுகால்சிறுபறவை அம்சிறகால் ஒன்றி வீசும் சிறுகாற்றுக்கு இடை ஆற்றாது தேய்ந்து, என்றும் நுடங்கும் என்ப.

பதவுரை.

ஏழு உலகும் - ஏழு உலகத்திலும்
கவிகை - (உனது) குடையின்
நிழல் - நிழலானது
நின்ற - தங்கிய
வேந்தே - அரசனே,
அறுகால் - ஆறு கால்களையுடைய
சிறு - சிறிய
பறவை - பறவைகளாகிய வண்டுகள்
அம் - (தமது) அழகிய
சிறகால் - சிறகுகளினால்
ஒன்றி - நெருங்கி
வீசும் - வீசுகின்ற
சிறு - மெல்லிய
காற்றுக்கு - காற்றினுக்கு
இடை - (தமயந்தியின்) இடுப்பு
ஆற்றாது - பொறுக்காமல்
தேய்ந்து - தேய்வடைந்து
என்றும் - எப்பொழுதும்
நுடங்கும் - துவளும்,
என்ப - (என்று அவளது நிலையைக் கண்டவர்) சொல்வர்.

விளக்கம் :—இந்தச் செய்யுளும் அன்னத்தினுடைய வார்த்தைகள். தமயந்தியின் இடுப்பைப் பின்னும் வருணிக்கின்றது.

அன்னம் என்ன சொல்லியது? என்ப என்று சொல்லியது - விதர்ப்ப நாட்டிலுள்ளவர் 'சொல்வார்கள்' என்று சொல்லியது. என்ன என்ப? நுடங்கும் என்ப - துவளும் என்பார். எது நுடங்கும் என்பர் - இடை. எப்பொழுது இடை நுடங்கும்? என்றும் - எப்பொழுதும். ஏன் இடை நுடங்கும்? தேய்ந்து - தேய்ந்து போனதால். எப்படித் தேய்ந்து? ஆற்றாது தேய்ந்து - சகிக்க முடியாமல் தேய்ந்து. எதற்கு ஆற்றாது? காற்றுக்கு ஆற்றாது. எப்படிப்பட்ட காற்றுக்கு? சிறு காற்றுக்கு - மெல்லிய காற்றிற்கு. எந்தச் சிறு காற்றுக்கு? வீசும் சிறு காற்றுக்கு. எதனால் வீசும் சிறு காற்றுக்கு? சிறகால் வீசும் சிறு காற்றுக்கு. எப்படிப்பட்ட சிறகால்? அம்சிறகால்-அழகிய சிறகுகளால். எப்படி வீசும்? ஒன்றிவீசும் - நெருங்கி வீசுகின்ற. அழகிய சிறகினால் எது நெருங்கி வீசுகின்ற மெல்லிய காற்றிற்குச் சகியாமல் தமயந்தியனது இடை தேய்ந்து போய் எப்பொழுதும் துவளும் என்று சொல்வார்கள்? பறவை - வண்டுகள். எப்படிப்பட்ட வண்டுகள்? சிறுபறவை. எவைகளையுடைய சிறுபறவை? கால் சிறுபறவை-கால்களையுடைய சிறு வண்டுகள். எத்தனை கால்களை உடையவை? அறுகால் சிறுபறவை - ஆறு கால்களையுடைய சிறிய வண்டுகள். இந்த விஷயத்தை அன்னம் நளனை என்னவென்று அழைத்துச் சொல்லியது? வேந்தே - அரசனே, என்று அழைத்துச் சொல்லியது. என்ன வேந்தே? நின்றவேந்தே - தங்கிய அரசனே. எது



தங்கிய வேந்தே? நிழல் தங்கிய அரசனே. எதனுடைய நிழல்? கவிகை நிழல் - குடையினது நிழல். எங்கே நிழல் தங்கிய வேந்தனே? உலகும் - உலகங்களிலும். எத்தனை உலகங்களிலும்? ஏழு உலகும் - ஏழு லோகங்களிலும். (அதாவது எல்லா உலகங்களையும் உனது அருளினால் காக்கின்ற வேந்தே, என்பது பொருள்.)

விரிவுரை :— முலையின் பாரம் தாங்கமாட்டாது இடை ஒடியுமெனச் சிலம்புகள் கதறுமென்று, அன்னம் முன் சொன்னதைக் கேட்டு நளன் அப்பறவையின் சொல் சாமர்த்தியத்தைக் கருதி சிரித்திருப்பான்; சிரிக்கவும் தான் சொன்னதை நளன் நம்பவில்லை என்று அன்னம் சிறிது சினம் கொண்டு, மீண்டு மிங்கு அவ்வுரையை ஸ்தாபிக்கமுயன்று இடை சிறியதாய்ப் போனதற்காக ஒரு காரணமும் கற்பித்துக் கூறுகின்றதுபோலும். சிலம்புகள் புலம்புதல் பொய்யென்பது வெளிப்படை. அதை கேட்கின்ற நளனுக்கும் பொய்யென்று தெரியும், சொல்கின்ற அன்னத்திற்கும் பொய்யென்று தெரியும். ஆனால் பொய்யென்று தெரிந்த ஒன்றை ஒருவன் சொல்லவரும்போது, அதுவும் கேட்கின்றவனுக்குச் சிறிது சந்தேகமும் இருப்பதாகத் தோன்றினால், விஷயத்தை மாத்திரம் சொல்லி நிறுத்தாமல், கேட்டவன் தடுத்துப் பேசாமலிருந்தாற்கூடத் தானாகவே, காரணமும் ஒன்று சேர்த்துக்கொள்வதும், பலரறிந்த விஷயமது என்று சாட்சிகள் இருப்பதாகச் செப்புவதும் இயல்பு. உதாரணமாக, கடன்படாதவன் ஒருவனை ஏதோ சந்தர்ப்பத்தில் 'உனக்குக் கடன் உண்டோ' என்று கேட்க நேர்ந்தால், இவன், 'இல்லை' என்று பதில் சொல்லிவிட்டுச் சும்மா இருந்துவிடுவான். தலைக்குமேல் கடன் இருப்பவன் ஒருவன், எந்தச் சந்தர்ப்பத்திலாவது தனக்குக் கடனில்லை என்று காட்டிக்கொள்வது அவசியமென்று ஏற்பட்டால், கேட்பதற்கு முன்னமேயேகூட, "எனக்குக் கடன் இல்லை......இல்லவே இல்லை.........எப்பொழுதும் இருந்ததில்லை......நான் தலைபோனாலும் வாங்கவே மாட்டேன்...........நான் ஏன் வாங்கவேண்டும், வரும்படிக்கு மேல் ஒருதம்படிகூடச் செலவுசெய்கின்ற இடம்பம் எனக்கு வழக்கமில்லை..........என்னைத் தெரிந்தவர்கள் யாரைக் கேட்டுப்பார்த்தாலும் எனக்குக் கடனே இல்லையென்று சொல்வார்கள்......சீ! சீ! கடன்கூட வாங்குவார்களா, மானமென்பது இருக்கின்றவர்கள்!" என்று இப்படியெல்லாம் பொய்யோடு பொய் அடுக்கிக்கொண்டு போவது அனுபவ பூர்வமாய்க் காணலாம். முன்செய்யுளில் நம்பத்தகாதபடி இடுப்புச் சிறியதா யிருந்த தென்றதற்கு இச்செய்யுளில் அன்னம் தேய்ந்த காரணம் சொல்வதும், மற்றவரை அதற்குச் சாட்சியாக்குவதும் இந்த அனுபவத்திற்கு இணங்கி இருக்கின்றது.

24. செந்தேன் மொழியாள் செறியளக பந்தியின்கீ
ழிந்து முறியென் றியம்புவார்—வந்தென்றும்
பூவாளி வேந்தன் பொருவெஞ் சிலைசார்த்தி
யேவாளி தீட்டு மிடம்.

பதப்பிரிவு :— செம் தேன் மொழியாள் செறி அளக பந்தியின் கீழ் இந்து முறி என்று இயம்புவார் வந்து என்றும் பூ வாளி வேந்தன் பொரு வெம் சிலை சார்த்தி ஏ வாளி தீட்டும் இடம்.

அன்வயம் :— பூவாளி வேந்தன் என்றும் வந்து பொருவெம்சிலை சார்த்தி ஏவாளி தீட்டும் இடம், செம்தேன் மொழியாள் செறி அளக பந்தியின்கீழ் இந்துமுறி என்று இயமபுவார்.

பதவுரை.

பூ - மலர்களை
வாளி - அம்புகளாக உடைய
வேந்தன் - அரசனாகிய மன்மதன்,
என்றும் - தினந்தோறும்
வந்து - வந்து
பொரு - போர் செய்கின்ற
வெம் - கொடிய
சிலை - (தனது) வில்லை
சார்த்தி - சார்த்திவிட்டு
ஏ வாளி - தனது பாணங்களை
தீட்டும் - தீட்டுகின்ற
இடம் - இடமாகிய நெற்றியை,
செம் - சிவந்த
தேன் - தேன்போன்ற இனிய
மொழியாள் - மொழியையுடைய தமயந்தியின்
செறி - அடர்ந்த
அளகம் - கூந்தலது
பந்தியின்கீழ் - வரிசைக்குக்கீழ் (இருக்கிற)
இந்து - சந்திரனது
முறி - துண்டு (போன்ற நெற்றியே)
என்று - என்று
இயம்புவார் - (அவளைக் கண்டவர்) சொல்லுவார்.

கருத்து :—இதுவும் அன்னத்தின்வாக்கு. மன்மதனது வில் போன்று வளைந்த புருவங்களுடன் கூடிக் கூந்தல் சுழல் புரளத்திகழும் பிறைச் சந்திரன் அனைய அவளது நெற்றி கண்டார்க்குக் காமம் விளைக்கும் தன்மையது.

விளக்கம் :—இயம்புவார் - சொல்லுவார். எதை இயம்புவார்? இடம் - இடத்தை. இடத்தை என்ன என்று இயம்புவார்? முறி என்று இயம்புவார் - துண்டு என்று சொல்லுவார். எந்த இடத்தை? தீட்டும் இடம் - தீட்டுகின்ற இடத்தை. எதைத் தீட்டும் இடம்? ஏவாளி தீட்டும் இடம் - அம்புகளைத் தீட்டும் இடத்தை. யார் ஏவாளி தீட்டும் இடம்? வேந்தன். எதை உடைய வேந்தன்? வாளி வேந்தன் - அம்புகளையுடைய அரசன். என்ன வாளி? பூவாளி - புஷ்பங்களாகிய அம்புகள். பூவாளி வேந்தன் ஏவாளி தீட்டுவதன்முன் என்ன செய்து தீட்டுவான்? சார்த்தி - சார்த்தி விட்டு. எதைச் சார்த்தி விட்டு? சிலை - வில்லை. எப்படிப்பட்ட வில்? வெம் சிலை- கொடிய வில். என்ன செய்கின்ற வெம் சிலை? பொரு வெம் சிலை-போர் செய்வதற்குரிய கொடிய வில். என்ன செய்து இக்காரியம் செய்வான்? வந்து. எப்பொழுது? என்றும் வந்து - தினந்தோறும் வந்து. பூவாளி வேந்தன் என்றும் வந்து பொரு வெம் சிலை சார்த்தி ஏவாளி தீட்டும் இடத்தை என்ன என்று இயம்புவார்? புஷ்பங்களைப் பாணமாகவுடைய அரசனாகிய மன்மதன் தினம்தோறும் வந்து தனது போர் செய்வதற்குரிய கொடிய வில்லைச் சார்த்திவிட்டுத் தன் பாணங்களைத் தீட்டுகின்ற இடத்தை முறி - (துண்டு) என்று இயம்புவார். எதன் முறி? இந்துமுறி - சந்திரனது துண்டு. எங்கே இருக்கின்ற இந்துமுறி? பந்தியின்கீழ் (இருக்கின்ற) இந்துமுறி - வரிசையின்கீழ் இருக்கின்ற சந்திரனின் துண்டு. எதன் பந்தி? அளகபந்தி-கூந்தல் வரிசை. எப்படிப்பட்ட அளகம் அது? செறி அளகம் - அடர்ந்த கூந்தல். யாருடைய செறி அளகபந்தி? மொழியாள் - வார்த்தைகளை யுடையவளது. எதுபோன்ற மொழியாள்? தேன் மொழியாள். தேன்போன்ற வார்த்தைகளை யுடையவள். எப்படிப்பட்ட தேன்? செம்தேன் - சிவந்த தேன்.

விரிவுரை :—காதலுற்றவர் மனதில் மேன்மேலும் ஆசையை விளைக்கின்ற மன்மதன் கையில் தாங்கிய வில் கரும்பு, எய்யும் அம்பும் அரும்பு. பூவாளி வேந்தன் என்பது ஆதலால் பூவை அம்புகளாக உடைய அரசன் என்று பொருள்பட்டு மன்மதனைக் குறிக்கின்றது. அவன் தான்

காமபாணத்தை எய்வதற்கு முன்னால் அதைத் தீட்டுகின்ற இடம் தமயந்தியினுடைய நெற்றியாம். இப்படிச் சொல்லுவதின் கருத்து என்ன? தமயந்தியின் நெற்றியினது அழகால் அதைக் கண்டவர் கணடவளவிலே காம மயக்கம் அடைவார்கள் என்பதாம். வில்லாள் ஒருவன் அம்பைத் தீட்டுமுன் தன்வில்லைச் சார்த்தி வைக்கவேண்டும். இங்கு மன்மதனும் அவ்வாறே செய்கின்றான். அவ்வில்தான் தமயந்தியின் புருவம். வளைந்திருக்கின்ற தன்மையால் வில் மாதாது புருவத்திற்கு உவமையாகின்றது. இந்துமுறி என்பது இச்செய்யுளில் நெற்றியைக் குறிக்கின்றது, சந்திரனது ஒரு துண்டுபோல் பிறைச் சந்திரன் இருப்பதால். பிறைச் சந்திரன் போன்ற நெற்றியென்னும் இந்துமுறி என்பது உவமை ஆகு பெயராய் நெற்றியை உணர்த்தியது. அளகம், என்றால் கூந்தல், பந்தி யென்றால் வரிசை, அளகபந்தி யென்றது இங்கு நெற்றியின் மீது புரள்கின்ற சிறு குழற்சுருள்.

25. அன்னமே நீயுரைத்த வன்னத்தை யென்னாவி
யுன்னவே சோரு முனக்கவளோ—டென்ன
அடைவென்றான் மற்றந்த வன்னத்தை முன்னே
நடைவென்றா டன்பா னயந்து.

பதப்பிரிவு:— அன்னமே நீ உரைத்த அன்னத்தை என் ஆவி உன்னவே சோரும் உனக்கு அவளோடு என்ன அடைவு என்றான் மற்று அந்த அன்னத்தை முன்னே நடை வென்றாள்தன்பால் நயந்து.

அன்வயம்:—அந்த அன்னத்தை முன்னே நடை வென்றாள்தன்பால் நயந்து, "அன்னமே, நீ உரைத்த அன்னத்தை உன்னவே என் ஆவி சோரும்; மற்று, அவளோடு உனக்கு என்ன அடைவு" என்றான்.

கருத்து:—தமயந்தியின்மீது மிகுந்த காதல்கொண்ட நளன், அன்னமே, உனக்கு அவளோடு என்ன சம்பந்தம், என்று வினவினான்.

பதவுரை.

அந்த - அந்த
அன்னத்தை - அன்னத்தை
முன்னே - முதலிலே,
நடை - நடையில்
வென்றாள்தன்பால் - வென்றவளாகிய தமயந்தியினிடத்தில்
நயந்து - ஆசைகொண்டு,
அன்னமே - ஓ அன்னமே
நீ - நீ
உரைத்த - சொன்ன
அன்னத்தை - அன்னம்போன்ற தமயந்தியை
உன்னவே - நினைத்தமாத்திரத்தில்
என் - என்னுடைய
ஆவி - உயிரானது
சோரும் - (அவளைப் பெறுவேனோ யாதோ என்னும் ஐயத்தால்)தளர்ந்து போகின்றது.
மற்று - அது கிடக்கட்டும்
அவளோடு - அந்தத் தமயந்தியோடு
உனக்கு - உனக்கு
என்ன அடைவு - என்ன சம்பந்தம்,
என்றான்—என்று (நளன் அன்னத்தைக்) கேட்டான்.

விரிவுரை:— இனி இந்த அன்னத்தைக்கொண்டே தமயந்தியைத் தான் அடையவேண்டுமென்று நளன் நினைத்து, இவ்வன்னம் சொல்வதை அவள் கேட்பாளோ என்னவோ, இதற்கு அவளிடத்தில் செல்வாக்கு இருக்கின்றதோ இல்லையோ என்னும் சந்தேகம் கொண்டவனாய், 'உனக்கும் அவளுக்கும் என்ன சம்பந்தம்?' என்று விசாரிக்கின்றான். (அடைவு - அடைதல் - சேர்தல் - சம்பந்தம்).

26. பூமனைவாய் வாழ்கின்ற புட்குலங்கள் யாமவட
மாமனைவாய் வாழு மயிற்குலங்கள்—காமன்[ன்
படைகற்பான் வந்தடைந்தான் பைந்தொடியாள்
நடைகற்பான் வந்தடைந்தே நாம். [பாத

பதப்பிரிவு:— பூ மனைவாய் வாழ்கின்ற புள் குலங்கள் யாம் அவள்தன் மா மனைவாய் வாழும் மயில் குலங்கள் காமன் படை கற்பான் வந்து அடைந்தான் பசுமை தொடியாள் பாத நடை கற்பான் வந்து அடைந்தேம் நாம்.

அன்வயம்:— காமன் படை கற்பான் வந்து அடைந்தான். பூமனைவாய் வாழ்கின்ற புள்குலங்கள் யாம் அவள்தன் மாமனைவாய் வாழும் மயிற்குலங்கள், (ஆகிய) நாம் பைந்தொடியாள் பாத நடைகற்பான் வந்து அடைந்தேம்.

பதவுரை.

காமன் - மன்மதன்,
படை - ஆயுதப்பயிற்சி
கற்பான் - கற்பதற்காக
வந்து - (தமயந்தியினிடம்) வந்து
அடைந்தான் - சேர்ந்தான்.
பூ - தாமரைப் பூவாகிய
மனைவாய் - வீட்டில்
வாழ்கின்ற - வசிக்கின்ற
புள்குலங்கள் - பக்ஷிசாதியாகிட
யாம் - நாங்கள்,
அவள் - அவளுடைய
மா-சிறந்த
மனைவாய் - மாளிகையில்
வாழும் - வசிக்கின்ற
மயில் குலம் - மயில் கூட்டங்கள்
நாம் - (ஆகிய) நாங்கள் இருவகையினேரும்,
பை - பசுமையான
தொடியாள் - வளையல்களை யணிந்த தமயந்தியின்
பாத - பாதங்களினது
நடை - நடையினது அழகை
கற்பான் - கற்றுப்பழகுவதற்கு
வந்து - (அவளிடம்) வந்து
அடைந்தேம் - சேர்ந்திருக்கின்றோம்.

கருத்து:—"காமம் விளைக்கின்ற தன் தொழிலை மன்மதன் இவளது கண்களி லிருந்து கற்றுக் கொண்டு போக வந்திருப்பது போலவே, பூவிலே வாசம் செய்கின்ற அன்னங்களாகிய நாங்கள் அம்மலரை விட்டு அவள் மனைக்கு வந்து அங்கிருக்கின்ற மயில்களுடன் சேர்ந்து தமயந்தியின் நடையைக் கற்றுக்கொள்ள இருக்கின்றோம். இதுவே எனக்கும் அவளுக்கும் இருக்கின்ற தொடர்பு என்று," அன்னம் நளனுக்கு மறுமொழி கூறியது.

விரிவுரை:—மாதர்தம் கூரிய பார்வையால் ஆடவர் அகம் பிளக்க நோக்கக் காமம் விளைவது இயல்பென்று, காமத்தை விளைக்கின்ற தொழிலுடைய மன்மதன், அவள் எவ்வாறு நோக்குகின்றாளோ அவ்வாறு தானும் தனது பாணங்களை எய்வதற்குக் கற்பதற்காக அவள் வீட்டில் எப்பொழுதும் காத்துக் கிடக்கின்றானும். அது போலவே இவ்வன்னம் அவளுடைய நடையைக்கற்க அங்குத் தங்கி யுள்ளதாம். அன்னமும் மயிலும் நடையினது அழகிற் சிறந்தன அவைகளே இவளிடத்தில் பாடம் கற்க வந்தனவென்றால் இவள் நடையின் அழகு மிகுதி என்று தெரிகின்றது. இதுவரையில் தமயந்தியின் நடையழகை வருணிக்காத அன்னம், நளனது கேள்விக்குப் பதில் சொல்லும் வாயிலாக இங்கு அதையும் கூறியது.

குறிப்பு:—1. மனைவாய், என்பதிலுள்ள வாய் இடத்தைக் காட்டவந்த உருபு. இப்படியே, கண் தலை புறம் அகம், என்ற மனிதர்களுடைய உறுப்புக்களின் பெயர்கள், அவ்வுறுப்புக்களைக் குறிக்காமல் மற்றப் பதங்களோடு சேர்ந்து இடத்தைக் காட்டும். [மனைவாய் - வீட்டினிடத்தில். நகர்க்கண் - நகரத்தினிடத்தில். பொழில்தலை - சோலை யினிடத்தில், ஊர்ப்புறம் - ஊரினிடத்தில். பொழில்அகம் - சோலையினிடத்தில்.]

2. படைகற்பான், நடைகற்பான், என்ற இவை பார்ப்பதற்கு வினைமுற்று மாதிரி இருந்தாலும் அவை வினைமுற்று அல்ல. இவை இங்கு வினை எச்சங்கள். (முன், 52-வது பக்கத்தில் வினையெச்சத்தின் இலக்கணம் கூறப்பட்டிருக்கின்றது. அதை இங்கு ஒருமுறை பார்த்துக்கொள்ளவும்). செய்ய செய்து என்பதைப் போலவே செய்வான் என்ற ஒரு உருவமும் வினையெச்சத்திற்கு உண்டு. அர்த்தத்தை ஒட்டி அதுவே வினைமுற்றாகவும் இருக்கலாம். 'இந்தத் தச்சன் பெட்டி செய்வான்', என்பதில் செய்வான் என்ற சொல் தன் வரையிலேயே அர்த்தம் முடிவதால் அது வினைமுற்று. 'அரசன் போர்செய்வான் எழுந்தனன்' என்றதில் செய்வான் என்னும் சொல் செய்ய என்னும் பொருளில் வந்து, அரசன் போர்செய்ய (அதாவது செய்யும் பொருட்டு) எழுந்தனன்' என்ற கருத்தைக் காட்டுகின்றது. செய்வான், என்பது தன்வரையில் அர்த்தம் பூர்த்தியாகாமல், எழுந்தனன் என்னும் வினை முற்றைக் கொண்டு முடிகின்றபடியால், அது இந்த இடத்தில் வினையெச்சமாகும். அதேவிதமாக இச்செய்யுளில், காமன் படைகற்பான் வந்து அடைந்தான்' 'நடைகற்பான் வந்து அடைந்தேம்' என்ற இடங்களிலும் கற்பான், என்பன கற்பதற்கு என்ற அர்த்தத்தில் நின்று வந்து என்னும் இன்னொரு வினையெச்சத்தைக்கொண்டு முடிகின்ற வினையெச்சங்கள். இந்தப் பிள்ளை தன் பாடத்தைக் கற்பான், இங்கே வினைமுற்று. பாடம் கற்பான் பள்ளிக்குச் சென்றேன் — வினையெச்சம்.



# வானசாஸ்திரம்

ஆகாய வெளியில் காணப்படும் சூரியன் சந்திரன் நக்ஷத்திரங்கள் எல்லாம் மிகப் பெரிய அண்டங்கள் என்பதையும், அவை அந்தர நிலையில் ஒன்றிலிருந்து மற்றொன்று மனதினால் யூகித்தும் கொள்ளமுடியாத தூரத்தில் நிலவழுவாது இருக்கின்றன வென்பதையும், மற்றும் இவைகளுடைய தன்மை உருவம் முதலியவற்றையும் உண்மையாய் ஒருவன் உணருவானாயின் சிருஷ்டியின் பெருமையும் அதனில் அவனுக்கு உரியஇடமும் நன்கு விளங்கும். இவற்றைப் பற்றிய அறிவு பரவவேண்டுமென்னும் விருப்பத்தினால் இப்பத்திரிகையில் தற்காலவானசாஸ்திர நிபுணர் உலகத்தில் பலவிடங்களிலிருந்து தூரதிருஷ்டிக் கண்ணாடி முதலிய கருவிசாதனங்களின் மூலமாகச் சிருஷ்டியில் அமைந்துள்ள அண்டங்களின் அமைப்பு தன்மை ஆகியவற்றைப்பற்றிச் சொல்லியிருக்கும் உண்மைகளை யாவரும் அறிந்துகொள்ளும்படி இப்பத்திரிகையில் எழுதிவருவோம்.

188991.

'கண்ணாற்கண்டதும் பொய்' என்பது வானசாஸ்திரத்திற்கே ஏற்றது. நமக்குத் தட்டையாய்த் தோற்றும் பூமி உண்மையில் அப்படி அல்ல. சூரியன் ஆகாயத்தில் ஓடுவதுபோலத் தெரிகிறது, சந்திரன் தேய்ந்து வளருவதுபோல விருக்கிறது, நக்ஷத்திரங்கள் சிறு ஒளிகளாய் நமது கண்களுக்குப் புலப்படுகின்றன. ஆனால் இவை எல்லாம் நமது கட்புலனுக்கு ஏற்பட்ட தோற்றங்களே யாம். உண்மை வேறு. சூரியன் பூமியைச்சுற்றி ஓடுவதுமில்லை, சந்திரன் தேய்ந்து வளர்வதுமில்லை. நக்ஷத்திரங்கள் சிறு ஒளிகளுமல்ல. இவற்றைப்பற்றிப் பின்னால் விரித்துக் கூறுவோம்.

அநேக ஆயிரக்கணக்கான வருஷங்களாகக் கல்தேயா எகிப்து இந்தியா சீனா முதலியதேசங்களில் அறிஞர்பலர் விண்ணில் தோன்றும் சோதிகளைப்பற்றிய விசாரணை செய்துவந்தார்கள். நமது தேசத்தில் சோதிசாஸ்திரம் சோதிடத்தோடு கலப்புற்று வேற்றுமை தோற்றாது போனதால் சோதிசாஸ்திர ஆராய்ச்சி பயின்றார்க்கன்றி, ஏனையோருக்கு நாம் வானசாஸ்திரத்தில் அடைந்திருந்த தேர்ச்சி நன்றாய் விளங்காது. தற்காலத்துக் கருவிகளின் உபபலமின்றி நம்முன்னோர் அநேக உண்மைகளைத் தெரிந்து அவைகளை நூலாகவும் தொகுத்திருந்தார்கள். ஆனால் அது கணிதநூலாகவே யிருந்தது. இவ்விதக் கணிதநூலாக இருந்தபோதிலும் இந்திய சோதி சாஸ்திரத்துக்கு மூலாதாரப் பிரமாணம் தற்கால வானசாஸ்திர மூலாதாரப் பிரமாணத்துக்கு வேறுபட்டிருந்தது. அவ்வேறுபாடுகளைப்பற்றி இவ்விடம் நாம் விரிவாய் எடுத்துக்காட்டாது, அவ்வப்போது சந்தர்ப்பம் வருமாயின் குறிப்பாய்க் காட்டுவோம்.

தற்கால வானசாஸ்திரத்தின் (modern astronomy) ஆராய்ச்சி நானூறு வருஷங்களுக்குமுன் ஆரம்பித்ததென்று சொல்லலாம். அதற்குமுன் சிருஷ்டியில் பூமியே முக்கியமானதென்றும் மற்றைய சூரியன் சந்திரன் கிரகங்கள் நக்ஷத்திரங்கள் யாவும் பூமிக்குக் காங்கையும் வெளிச்சமும் கொடுப்பதற்காகவும் அமைக்கப் பெற்றுப் பூமியைச்சுற்றி ஓடிக்கொண் டிருக்கின்றனவென்றும் யாவரும் மதித்திருந்தனர். இந்தக் கொள்கை பிழை என்பதை முதல்முதல் எடுத்துக் காட்டியவர் பிரஷ்யாதேசத்து நிக்கலாஸ் காப்பர்ணிகஸ் (Nicholas Copernicus) என்பவரே. அவர் பூமியை அவருக்குமுன் இருந்தவர்களால் வைக்கப்பட்டிருந்த உன்னத ஸ்தானத்திலிருந்து இறக்கி அதுவும் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி இவற்றைப்போன்ற ஒரு கிரகம் என்றும், கிரகங்கள் எல்லாம் தத்தம் இடத்திலிருந்து சூரியனைச் சுற்றி நிலை பிறழாது அதிவேகமாக ஓடிக்கொண்டிருக்கின்றன வென்றும், திருஷ்டாந்தப் படுத்தினார். முதலில் இவர் சொன்னது எல்லாராலும் ஏற்கப்படவில்லை. ஆனால் சிறிது காலத்துள் ஐரோப்பிய வானசாஸ்திர நிபுணர்கள் எல்லாரும் இது தான் மெய்யென்று ஏற்றுக்கொண்டார்கள். இந்தச் சரித்திரத்தை நாம் தொடர்ந்து செல்லவேண்டியது அவசியமில்லை.

நாம் வசிக்கும் பூமியே நமக்கு முக்கியமானது. ஆகவே நம்விசாரணை அதிலிருந்து ஆரம்பிப்பதேமுறை. பூமி நமக்கு எவ்வளவோ பெரிது போல இருந்தாலும் மற்ற அண்டங்களோடு ஒத்துப் பார்க்கும்போது சமுத்திர வெள்ளத்தில் ஒரு துளிபோலிருக்கிறது. பூமி சூரிய

னைச் சுற்றி ஓடும் கிரகங்களில் ஒன்று என்று சொன்னோம். ஆகவே சூரியன் மத்தியஸ்தானத்தில் இருந்து மற்றக்கிரகங்கள் அதை முறையாய்ச் சுற்றிவருகின்றன. சூரியனையும் கிரகங்களையும் சூரிய கிரகக்கூட்டம் (Solar System) என்று அழைப்போம். இதில் சேர்ந்தவை, சூரியன் கிரகங்கள் கிரகங்களை அடுத்து அவைகளைச் சுற்றி ஓடும் உபகிரகங்கள் அல்லது சந்திரர்கள் அஸ்தர உடுக்கள் (Asteroids) தூமகேதுகள்(Comeats) எரி நட்சத்திரக்(Meteors)குழாங்களுமே.

சூரியன் எரிந்து கொண்டிருக்கும் மிகப் பெரிய ஒரு அண்டம். அது பூமியைப் பார்க்கிலும் எத்தனையோ மடங்கு பெரியது. அதன் குறுக்களவு 866540 மைல் என்றால் அதன் அளவை யூகித்துக்கொள்ள வேண்டியதுதான்.

கிரகங்கள் எட்டு புதன், வெள்ளி, பூமி செவ்வாய், வியாழன், சனி, யூரேனஸ், நெப்டியூன். இவற்றுள் பிந்திய இரண்டும் தூரதிருஷ்டிக் கண்ணாடியின் வழியாய்த்தான் பார்க்க முடியும். ஆகவே இந்த இரண்டு கிரகங்கள் உண்டு என்பதும் 150 வருஷத்துக்கு முன் ஒருவருக்கும் தெரிந்ததில்லை.

ஸர் வில்லியம் ஹெர்டில் என்பவர் 1781-ம் ஆண்டு மார்ச்சுமாதம் 13-ம் தேதி ஆகாயத்தைப் பரிசோதனை செய்து கொண்டிருக்கையில், அவர் முன்பார்த்திராத உருவம் ஒன்று தென்பட்டது. அதைத் தொடர்ந்து ஆராய்ந்ததில் அது ஒருகிரகம் என்று ஏற்பட்டது. இது தான் யூரேனஸ் என்று பேரிடப் பட்டிருக்கிறது. இதன் பின், 1846-ம் ஆண்டு நெப்டியூன்என்னும் கிரகம் கண்டு பிடிக்கப்பட்டது. இதற்குமுன்வானசாஸ்திரநிபுணர்பலர் யூரேனஸ்கிரகத்துக் கப்பாலும் ஒருகிரகம் இருக்கவேண்டுமென்று கணிதமுறை ஆராய்ச்சியினால் நிச்சயப்படுத்தி இருந்தார்கள். இதை ஆதாரமாகக்கொண்டு லாவிஷியர் என்னும் பிரான்சிய வானசாஸ்திரி இந்தக் கிரகத்தையும் தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலமாகக் கண்டுபிடித்தார்.

அஸ்தர உடுக்கள் புதனுக்கும் வியாழனுக்குமிடையே உள்ள வெளியில் சூரியனைச்சுற்றி ஓடிக்கொண்டிருக்கும் சிறு கிரகங்கள். இவைகளில் ஏறக்குறைய 600 வரையில் இருக்கின்றன. இவற்றுள் மிகப்பெரியது என்று சொல்லக்கூடிய சேஹஸ் என்பதன் குறுக்களவு 500 மைலுக்குள்தானிருக்கிறது. உபகிரகங்களில் சந்திரனைத் தவிர்ந்த மற்றைய உபகிரகங்களும் நூற்றைம்பது வருஷகாலத்துக்குள் கண்டுபிடிக்கப் பட்டன.

உபக்கிரகங்களில் சந்திரனைத் தவிர்ந்த மற்றைய உபக்கிரகங்களும் நூற்றைம்பது வருஷ காலத்திற்குள் கண்டு பிடிக்கப்பட்டன.

கிரகங்கள் சூரியனை எவ்விதம் சுற்றிச் செல்லுகின்றனவோ அவ்விதமே உபகிரகங்கள் கிரகங்களைச் சுற்றிச் செல்லுகின்றன. எல்லாக் கிரகங்களுக்கும் உபகிரகங்கள் இல்லை. சூரியனுக்குச் சமீபத்திலிருக்கும் இரண்டு கிரகங்களுக்கும் உபகிரகங்கள் இல்லை. பூமிக்கும் சந்திரனும் செவ்வாய்க்கும் இருசிறுசந்திரர்களும்வியாழனுக்கு ஏழு சந்திரர்களும் சனிக்குப் பத்தும் யூரேனஸுக்கு நாலும் நெப்டியூனுக்கு ஒன்றும் உண்டு. இக்கடைசிக் கிரகத்துக்கு ஒன்றுக்கு அதிகமான சந்திரர்கள் இருக்கலாமென்று யூகிக்கப்படுகிறது. ஆனால் தூரதிருஷ்டிக் கண்ணாடிக்கு எட்டாத் தூரத்தில் அது இருப்பதால் காண்பது அசாத்தியமாய் இருக்கிறது.

மேற்சொல்லப் பட்டவைகளைத் தவிர எரி நக்ஷத்திரங்கள் என்று சொல்லப்படும் பிண்டங்களும் இச் சூரியகிரகக் கூட்டத்துட் சேர்ந்தவையே. இவைகள் இக் கூட்டத்துக்குள் அலைந்து திரியும். அவ்விதம் திரியும் போது பூமியின் வாயுமண்டலத்தில் செல்லுகையில் அவைவாயுவுடன் தேய்வதால் எரிந்து சாம்பராய்ப்போய் விடுகின்றன. இவ்விதம் எரிந்தோடுவது நட்சத்திரம் ஒன்று நிலைபெயர்ந்து செல்வதை ஒத்திருக்கு மாதலால் இவைகளுக்கு எரிநக்ஷத்திரங்கள் என்னும் பெயர் வந்தது.

இச் சூரியகிரகக் கூட்டத்துக்கு வெகு தூரத்துக் கப்பால் நக்ஷத்திரங்கள் ஆகாய வெளியில் பரவி இருக்கின்றன. பூமியிலிருந்து நக்ஷத்திரங்களின் தூரங்களை அளவிட முடியாது. மனதிலும் அடங்காது. ஆனால் ஒளியின்வேகத்தை அளவுகோலாய்க் கொண்டு பூமிக்குச் சமீபத்திலிருக்கிற நக்ஷத்திரத்தின் ஒளி பூமிக்கு வருவதற்கு நாலுவருஷம் செல்கிறதாக அளவெடுத்திருக்கிறார்கள். ஒளியின் வேகம் ஒரு விநாடிக்கு 196,000 மைல். இதிலிருந்து நக்ஷத்திரத்தின் தூரத்தைக் கணக்கிட்டுக் கொள்ளலாம்.

இ. குமரய்யா.

# மலர் வனம்.

## அடிகளுக்கே யேற்ப வென்றான்.

பாரதப்போரில்பதின்மூன்றாம்நாள் வயதிற்சிறியகாளை அபிமன்யுவைப் பகைவர் வஞ்சனைசெய்து வதைத்து விட்டனர். மறுபுறத்தில் போர்புரிந்திருந்த அவன் தந்தை அருச்சுனன் இது அறிந்திலன். அன்றுமாலை அமர்தணிந்து பாசறையெய்திய பின்னரே தன்னரும் ஒருமகன் சயத்திரதனால் கொலையுண்ட செய்தியை அருச்சுனன் கேள்வியுற்றுக் கரைசெய்ய அரியதொரு துயரக்கடலில் ஆழ்ந்து உழல்பவனாயினான். பாலனை இழந்த துயரம் படிப்படியாய்க் கொன்றவன்மீது அடங்காத கோபமாய் மாறியது. தன்சிறு காளையை வீணாகக் கடும்போர்செய்ய ஏவினர்என்று தருமனையும் வீமனையும் தனஞ்சயன் வெகுண்டு, போர் எதிர்த்த பாலகனை யுத்தமுறை பிறழ்ந்து கொன்ற செயத்திரதனை மறுநாள் சூரியன் சாய்வதன்முன் "ஆவி கவரேனேல், நான் வெம்தழலின் வீழ்வேன், இது வேத மொழி" என்று சபதம் செய்து, அவ்வாறு கொல்ல இயலாது தான் தழல்விழுந்து மாய்ந்தபின் போகும் நரகமும் இவைஎன்று அருச்சுன் உரைப்பானாகி :—

இன்றபிமன் வாளமரி லின்னுயி ரிழக்கக்
கொன்றவனை நாளையுயிர் கோறல்புரி யேனேன்
மன்றிலொரு சார்புற வழக்கற வுரைக்கும்
புன்றொழிலர் வீழ்நரகு புக்குழலு வேனே.

[இன்று அபிமன்யுவைக் கொன்றவன் உயிரை நாளை நான் கொல்லாவிட்டால், நியாயஸ்தலத்தில் பொய்ச் சாட்சி சொன்னவர்கள் விழுகின்ற நரகத்தில் விழக்கடவேன்]

மோதமரி லென்மகன் முடித்தலை துணித்த
பாதகனை நானெதிர் படப்பொரு திலேனேல்
தாதையு டனேமொழி தகாதன பிதற்றும்
பேதைமக னெய்துநெறி பெற்றுடைய னாவேன்.

[என்மகன் தலையைத்துணித்த பாதகனை நாளை நான் எதிர்க்க இயலாமற்போனால், பெற்ற தகப்பனிடத்தில் தகாதபடி பேசும் மடமகன் அடைகின்ற கதியை நானும் பெறக் கடவேன்]



சேயனைய வென்மதலை பொன்றவமர் செய்தோன்
மாயமுன டர்த்துவய வாகைபுனை யேனேல்
தாயர்பசி கண்டுனனி தன்பசி தணிக்கும்
நாயனைய புல்லருறு நரகிலுறு வேனே.

[என் மதலையைக் கொன்றவனை நான் வென்றிடாவிட்டால், பெற்றதாய் பசித்திருக்கத் தான் புசிக்கும் நாய்அனைய கயவர் சேர்கின்ற நரகத்தைச் சேரக்கடவேன்.]

வஞ்சனையி லென்மகனை யெஞ்சமுன் மலைந்தோ
னெஞ்சமெரி யுண்ணவமர் நேர்பொரு திலேனேல்
தஞ்சமென வடைந்தவர் தமக்கிடர் நினைக்கும்
நஞ்சனைய பாதகர் நடக்குநெறி சேர்வேன்.

[கபடற்ற என்மகனைத் துரோகம் செய்து கொன்றவன் நெஞ்சு கொளுத்த நான் போர் செய்யாவிட்டால், அடைக்கலம் அடைந்தவர்களுக்குத் தீங்குசெய்ய நினைக்கும் விஷமனைய பாதகர் செல்லும் கதி செல்லக் கடவேன்]

என்று பல விரதமொழிகள் சாற்றினான். விசயன் இவ்வாறு வஞ்சின முரைக்கக்கேட்ட தருமன், 'நாளைச் சயத்திரதன் போர்முனைவராமலே சேனைக்குள் ஒளித்து கொண்டால், அவனை எவ்வாறு கொல்லுவது இயலும், இயலாது அருச்சுனன் தன் சபதப்படி தீயிலே விழுந்திறந்தால் மற்ற நால்வரும் உடன்மாள்வதும் திண்ணமாயிற்றே' என்று மனங்கலங்கி நிற்க, முதலையின் வாய்ப்பட்ட யானைக்கு அஞ்சல் என்று அருள் சுரந்த பெருமான், அவனைத் தேற்றிக், 'கயிலைவாழ் சிவபிரானை இவ்விரவே தரிசித்து வருவோம் வா,' எனப் பார்த்தனைத் தன்னோடு அழைத்தேகினான்.

கண்ணனும் அருச்சுனனும் வெள்ளிமலை கண்ணைப் போயிருந்த அவ்விரவுகழிந்து கீழ்த்திசையில் சுக்கிரன் உதயமாயிற்று. அச்சமயம், மெய்ம்மை விரதம் பூண்டு அறமே உருவெடுத்து அவதரித்ததெனத் திகழும் தருமராசன் செய்ததை நினைத்தால் இவ்வுலகில் யாரே வியப்படையாதிருப்பார். வீமசேனனுக்கு இடும்பி என்னும் அரக்கியின் வயிற்றில் பிறந்தவனும் கடோற்கசனைத் தன்னருகு அழைத்தான். அழைத்து, அருச்சுனன் செய்த சபதத்தையும் அவன் அரன்பால் சென்றிருப்பதையும் துரியோதனனிடத்தில்போய்ச் சொல்லிவிட்டு வருமாறு கட்டளையிட்டான். யுத்தமுறையில் ஒரு திறத்தார் சூழ்ச்சியை மறுதிறத்தார் அறியாவண்ணம் மறைத்துக் காப்பதுபோக இவ்வாறு வலிந்து தாமே சென்று உரைக்கும் பேதைமையை எண்ணிஎண்ணிப் புகலரிய திகைப்பெய்தினன் கடோற்கசன். காரியம் முடிகின்ற வரையில் தம் கருத்தை வெளிப்படுத்தாது காப்பதன்றோ அரசர் முறைமையாகும். அதுவும் யுத்த தந்திரத்திற்கு இவ்வெள்ளைத் தன்மை யொக்குமோ! காளிதாஸ மகா கவியும் இரகுவம்சத்[illegible]துதித்த திலீப மன்னனின் தன்மையை,

தஸ்ய ஸம்வ்ருதமந்த்ரஸ்ய கூடாகாரேங்கிதஸ்யச
பலாநுமேயா : ப்ராரம்பா : ஸம்ஸ்காரா : ப்ராக்தநா இவ.

[செய்கையாலும் முகக்குறிப்பாலுங்கூடத் தன் மந்திராலோசனையை யாவரும் ஊகிக்க முடியாமல் தன் காரியங்களை நிறைவேற்றிக் கொள்வான். இந்த ஜன்மத்தில் ஒன்று நமக்கு வந்தடைந்த பிறகே பூர்வஜன்ம வாசனை எதுவா யிருந்திருக்கக்கூடும் என்று நாம் ஒருவாறு யோசிக்கக் கூடுமோ, அப்படியே திலீபனது செய்கைகள் முடிந்தபின்தான் அவன்கருத்து எதுவாய் இருந்திருக்கக்கூடும் என்று நினைத்துப் பார்க்க இயலும். காரியம் முடிவதன்முன் அவன் கருத்து வெளிப்படாது.]

என்று பாராட்டி இருக்கின்றார். அரச தர்மம் இது வென்று காளிதாஸனனைய கவிவாணர்களும் கொண்டாடியிருக்க அதற்குமாறாகத் தன்சொல்லால் தன்னையே விற்பதுபோல்தோன்றும் உதிட்டிரன்உரைகேட்டுக் கடோற்கசன் மனந்தடுமாறாமல் என் செய்வான். ஆதலால்,

மற்றவன் முந்துறு தந்தையை வந்துவணங்கி
முன்வஞ் சனையில்
செற்றவர் தம்முட னுற்றது சொல்வதுசே
வகமோ வறிவோ
கொற்றவர் மாமுடி கமழ்கழ லாய்வலிகூர்
திறலுஞ் செயலும்
அற்றவர் போலவு ரைப்பதென் னென்றுளழன்
றுபுகன் றனனே.

[கடோற்கசன், தன்பெரிய தந்தையை வந்துவணங்கி, 'முன் வஞ்சனையால் கொன்றவர்களிடம்போய் இங்கு நிகழ்ந்ததைச் சொல்வது வீரமாகுமா, அல்லது அறிவுதான் ஆகுமா! வேந்தரெல்லாம் நின்து அடிதொழ வீற்றிருக்கின்ற பெரும, திறலும் செயலும் இல்லாது கையற்றுக் கிடக்கின்றவர்போல இவ்வாறு நீ என்னைத் தூதுபோகச் சொல்வது என்னவிந்தை! என்றுகொதிக்கின்ற மனத்தனாய்ப் புகன்றான்.]

தருமனுக்கு இவ்வுரைகேட்க நகையே வந்தது. தேகவலி அதிகம் படைத்தபேர்கள், அதனினும் அரக்கிவயிற்றிற் பிறந்தவன், 'சத்தியமே ஜயம்' என்னும் தூய வாக்கியத்தின் நுண்ணிய தத்துவத்தை எவ்வாறு அறிதல் கூடும். வெற்றியடைவதற்கு எவ்வழி கடைபிடிப்பதும் நியாயமே என்று நினைப்பவர்களிற் சிலர், கூடியவரையில் சத்தியத்தால் செயிப்பது உத்தமம் என்று எண்ணனோர்ந்தாலும்நேரலாமே யல்லாது இடைநிகழ்ச்சி எதிர்பாராமல் முடிவினில் அடைய வேண்டியது அம்மெய்மை எனும் தனிநிலையே என்பது தேறார். முரசக்கொடியுயர்த்திய தருமனுக்கோ சத்தியம் ஜயத்திற்கு ஒரு கருவியல்ல வென்பது நிச்சயம். ஆதலால் கடற்கோசனைப் பார்த்து,

திறனறி யாமலு ரைத்தனை மாருதிசிறு
வனெனும் படிநீ
மறநெறி யன்றுவ யிர்த்தவர் சொல்வதுவஞ்
சனையோ விரகோ
அறநெறி யேபொரு தல்லது வெல்லுதலாண்
மைகொலோ வழகோ
விறனெறி யாவது பொய்யில தென்றனன்மெய்
மையுணர்ந் திடுவான்.

[பீமசேனனுக்கும் இடும்பிக்கும் பிறந்த மகன் நீ என்பதற்கு ஏற்ப விஷயம்தெரியாமல் நான் சொன்னதை மறுத்துப் பேசினாய். நீ காட்டியது யுத்த முறையன்று. பகைவர் பேசியது வஞ்சனையா யிருந்தாலென்ன, கபடமாயிருந்தாலென்ன, தருமவழியிலே நாம் சண்டை செய்து வெல்லுவதல்லாமல் பிறவழியில் வெல்வது ஆண்மையாகுமா! வெற்றி என்பது பொய்யில்லாததொன்றே, என்றனன் மெய்ம்மையின் நித்தியத் தன்மையுணர்ந்த தருமன்]

இதன்மேல் தடுத்துரைக்கக் கடோற்கசனால் இயலவில்லை. மனதிலே சினம் முறுகினும் தலையால் தன் தந்தையைவணங்கி இரணகளங் கடந்தகன்று சுயோதனன்வைகிய பாசறையெய்தினான். பொழுதுபுலரப் போர்முறை யாதெனத் துரியோதனன் தன் துணைவருடன் தந்திராலோசனை செய்திருந்த சமயமாயிருந்தது இக்கடோற்கசன் வந்த சமயம். வந்த அவ்வரக்கச் சிறுவன் அவர்களது சூழ்ச்சிக்கு இடையே புகுந்து, "உங்கள் வீண்வார்த்தையை விட்டு என்தந்தை உதிட்டிரன் உரைத்தஒரு மெய்மொழியைக் கேளுங்கள்" எனச் சிறிதும் மதியாது ஆரம்பித்து, விஜயன் பூண்ட விரதமும் பொருப்பினில்வாழ் பெருமான்பால் போயுள

தும் யாவும் கூறி, 'வஞ்சனையால் அமரில் பகைவனைக் கொல்வது பாதகமென்று ஈதுரைக்க எனதப்பன் நும்பால் எனைத் தூது விடுத்தனன்' என்றுரைத்துக் கனன்று நின்ருன். பாம்பின் கொடி யுயர்த்திய துரியோதனன் இதைக்கேட்டு, "எத்தனையோ வேந்தர் மைந்தர் என்திறத்தில் சென்று மறித்தனர். என் மகனே இறந்திடவும் யான் யாதொன்றும் புகலாமல் இருக்கின்றேன். தன்மகன் இறந்தாலும், அதற்கவன் நெருப்பில் விழுவானும், சபதங்கள் செய்து அழுவது வில்திறம் மிகுந்த உன் அருச்சுனனுக்கு வீரமோ! ஏ, சிறுவா, பயந்து நடுங்கி இரவோடு இரவாய்ச் சிவன்மலை புகுந்து அவன் அத்திரமும் பெற்று, கொற்றத்தேர் திருமாலே ஓட்டவந்து எதிர்ப்பானானாலும், நாளைச் சூரியன் விழுவதன்முன் மகனைக்கொன்ற சயத்திரதனே தந்தையையும் கொன்றுவீழ்த்துவான் என்றுபோய்ச் சாற்றுவாய். வில்லிலும் தண்டிலும் தோள்வலியிலும் சயத்திரதன் யாருக்கும் இளைப்பானல்லன். ஆனை ஆன்கிலை அறிவது அல்லது நாளைப் போரிலே எவர் வெல்வார் என்பது இப்பொழுது தெரியுமோ!" எனச் சிரிக்கவே, கடோற்கசனுக்குக் கோபம் பின்னும் மூண்டது. மூண்ட அத்தீயில் நெய்யும் வார்த்ததென அருகிருந்த அங்கநாட்டரசனும் கர்ணன் பிரிகசிக்கும் குரலோடு, "நம் வேந்தன் துரியோதனனின் மகன், சல்லியனது மகன், சகுனியின் மகன், முதலாக எத்தனை பேர் செத்தாலும் அது பெரியதன்று. பாவம், இப்பூமியை ஆள்வதற்கென்று காத்திருந்த பார்த்தனின் பெரியமகன் அபிமன்யு இறந்தானானால், ஐயோ, அரசுக்குஇனி உரியவர் யார்இருக்கின்றார்! அங்கேயிருந்து சயத்திரதனது ஆவியைக்கவர்ந்திடுவேன்என்று ஆண்மைகூறி மங்கைக்கொருபங்கு தந்த சிவன்பால் பணிந்து வரம்பெறத் தனஞ்சயன் சென்றுவிட்டானாகில், எம்மிறைவா, சுயோதனப் பெருவேந்தே, உன் குடையின்கீழ் இதுவரையில் கூட்டங்கூடி உண்டு வாழ்ந்த நாங்கள் இனி எவ்வகையில் உனக்கு உதவி செய்யக் கிடக்கின்றது' எனத் தம்மை இகழ்வதுபோல் பாண்டவர் நாடுதுறந்த ஏழையர் என்பதையும், அருச்சுனன் பெற்றவலியும் பெறும்வரமும் அவனுரைத்தசூளும் தமக்கொரு பொருளல்ல என்பதையும் அங்கதமாகக் கூறி எள்ளினான். எள்ளிய இம்மொழிக்கு ஆற்ருது இடும்பனின் மருமகன், சீற்றம் பொங்கச் சீறிநோக்கிச், "சீ! சீ! ஓ மடயர்காள், இப்பூமி முழுதும் இன்னும் நீங்களே ஆள நினைத்திருக்கின்றீர்களோ. சிவனெரித்த முப்புரம்போல் உங்கள் படைதங்கிய இடமெல்லாம் இக்கொடிப் பொழுதில் நீறவத்து நீருக்கி வாயுவின்போன் ஈன் என்பதைச் சாதித்து வைப்பேன். உங்கள் கழுத்தைக் குலைகுலையாய் அறுக்க அருச்சுனனும் பொடிப்பொடியாய் உடைக்கப் பீமசேனனும் வரவேண்டுமோ! எஞ்சிய இச்சிறு இரவு கழிவதன்முன் நானொருவனே இங்கிருக்கு மத்தனைபேரையும் ஒருகைப் பிண்டமாய்ப் பிடித்துப் பிடிசாம்பராக்கிக் காற்றிலே தூற்றிவிட்டுப் போரையும் எம் பகையையும் முடித்துப் போய்ச்சேர மாட்டேனோ! எனது அரசத் தந்தையின் மெய்ம்மொழி பழுதாகப்படாதென்று சும்மாவிருக்கின்றேன் என்பதை அறியவல்ல புத்தியோ, ஏ புல்லர்காள், உங்களுக்கேது! இருவரும் எதிரெதிர் சமப்போர் செய்வது உலக இயற்கை. பருவமுதிராத எம்பாலகனை நீவிரோ ஒருங்குகூடி ஈர்த்தும் நிலைதடுமாறிப் பறந்து போனீர். இவ்வீரச் சிறுவனின் தேரை ஒருவன் அழிக்கக் கையை ஒருவன் துணிக்க அதன்பின் ஒருவன், போர் இனிச் செய்வேன் என்று வீரம்பேசிப் பொன்றிட்டான். இந்தச் சேவகத்திற்கோ உங்கள் வாய் இப்பொழுது கிழிகின்றது!" என இகழ்ச்சிக்கு இகழ்ச்சி பேசி இடித்துரைத்தான். அங்கிருந்த அரசரெல்லாம் வெகுண்டெழுந்தனர். அவரவர் அரைவாள் உறையுள் குலுங்கின. தூண்டிய போர் தனக்கு வாய்த்ததெனக் கடோற்கசன் வீர உவகை எய்தினான். அவனுரைத்த பெருமிதச் சொற்களாலும் அவனுயிரேனும் இரண்டிலொன்று அன்று தங்கு முடிந்திருக்கவேண்டும். இதற்கிடையில் துரியோதனனே தன்னவை இருந்தோரைக் கையமர்த்தி,

> இருக்குமெழி லவைக்கேற்ப வியம்பாமற்
> றன்மதத்தா லியம்பு கின்ற
> அரக்கிமக னுடனொன்றுங் கழறேலென்
> றனனிருந்த வரசர் யார்க்கும்.

[அங்கிருந்த அரசர்களை நோக்கித் துரியோதனன், இருக்கின்ற இச்சபையின் அழகிற்கு ஏற்கப் பேசத் தெரியாமல், தன் மதத்தினால் பேசுகின்ற இந்த அரக்கிமகனுடன் ஒன்றும் எதிர் பேசாதீர்கள், என்றான்.]

கடோற்கஜன் நாகரிகமற்ற மூர்க்க அரக்கனும்-சபைமுறை அனுசரித்து (Parliamentary Language) பேசத் தெரியாதவனும். ஒழுக்கமுறை (manners) கற்ற வேந்தர்கள் தாங்களாம். ஆதலால் இவனின் உயர்ந்தவர்களாம். இவைகளை நினைக்கக் கடோற்கசனுக்கு உள்ளங் கொதிக்கச் சொல்லுக்கு ஒரு பல்லாய்ப் பிடுங்குவதுபோல் எதிருரைப்பான்.

> 1. அந்தவுரை மீண்டவன்கேட் டாங்கவனை
> நகைத்துரைப்பா னரக்க ரேனும்
> சிந்தனையில் வீரகெண்ணார் செருமுகத்தில்
> வஞ்சகமும் செய்யா ரையா
> வெந்திறல்கூர் துணைவருக்கு விடமருத்தார்
> நிரைக்கழுவில் வீழச் சொல்லார்
> உந்துபுன லிடைப்புதையா ரோருவி ருப்பகற்ருர்
> உரையுந் தப்பார்,
>
> 2. செழுந்தழல்வாழ் மனைக்கொளுவார் செய்ந்நன்றி
> கொன்றறியார் தீங்கு பூணார்
> அழுந்துமனத் தழுக்குரு ரச்சமுமற் றருளின்றிப்
> பொய்ச்சூ தாடார்
> கொழுந்தியரைத் துகிலுரியார் கொடுங்கான
> மடைவித்துக் கொல்ல வெண்ணார்
> எழுந்தமரின் முதுகிடா ரிவையெல்லா
> மடிகளுக்கே யேற்ப வென்றான்.

[சுயோதனன் அரக்கனென்று தன்னை இகழ்ந்தவுரை கேட்டு எள்ளி நகைத்துக் கடோற்கசன் பின்வருமாறு உரைப்பான்:—நாங்கள் அரக்கரேனும். அரக்கர், மனதிலே கபடு நினைக்கமாட்டார், யுத்தத்திலே வஞ்சனை செய்யமாட்டார், ஐயா, சகோதரருக்கு விஷம் வைக்கமாட்டார், வரிசையாய்க் கழுவைநாட்டி விழச்சொல்லமாட்டார், நீரிலே அவர்களை முழுக்கமாட்டார், ஊரை விட்டுத் துரத்தமாட்டார், சொன்னசொல் மாறமாட்டார்; (2) வாழ்ந்த மனைக்கு நெருப்பு வைக்கமாட்டார், செய்த நன்றியை மறக்கமாட்டார், பழியொன்றும் சுமக்கமாட்டார், பொறாமை பாராட்டமாட்டார், பயமும் அருளுமில்லாமல் பொய்யான சூது ஆடமாட்டார், சகோதரர் மனைவியைத் துகிலுரிய மாட்டார், காட்டுக் கனுப்பிப் பின் கொல்லவும் நினைக்கமாட்டார், போரிலே புறங்காட்டி யோடமாட்டார், இவைகளெல்லாம் உத்தமர்காள், உங்களுக்கே ஏற்றவை, என்றான்]

"மதுகரம்"



# கம்ப ராமாயணம்

## பால காண்டம்

## 2. நாட்டுப் படலம்.

(114-வது பக்கத் தொடர்ச்சி)

அரிவைய ருற்றேரு வருங்கலை கற்றவர்

நாமுதல் மெய்யும் காமனூற் பொருளும் தங்கப்பெற்று, வருந்திவந்தவர்க்கு ஈதலும் வைகலும் விருந்துமன்றி விளைவன பிறிதொன்றில்லா வாழ்க்கையினிதுவைகிய கோசல தேசத்தவர்க்கு வாய்த்த குணங்களின் பெருமைக் கெல்லாம் காரணபூதமா யமைந்தது எதுவெனச் சிந்திக்குங்காலையில் சிறுகதை யொன்றுவந்து நம்வாய் உலவுகின்றது. மடவார் தொடர்பின்றியம் மாபெரும் நாட்டில் முடிவதொன்றில்லை போலும்! புயலும் கயலும் புன்னும் பூவும் விண்மதியும் பெண்யானையும் யாவும் தத்தமக்குற்ற நலமனைத்தும் நங்கையரிடத்தே கற்றனன.

> இயல்புடை பெயர்வன மயின்மணி யிழையின்
> வெயில்புடை பெயர்வன முலையவர் குழல்போல்
> புயல்புடை பெயர்வன பொழிலவர் விழிபோல்
> கயல்புடை பெயர்வன கடிகமழ் கழனி

[சோலையில், மாதரார்சாயலைப்போல் மயில்கள் நடமாடும். அவரணிந்த ஆபரணங்களின் பிரகாசம் வெயில்போல் எங்கும் பாவும் அவர்களது கூந்தலைப்போல் மேகங்கள் உலவும். கழனியில் அவர்களது கண்களைப் போல் கயல்மீன்கள் சஞ்சரிக்கும்.]

> இடையிற மகளிர்க ளெறிபுனன் மறுகக்
> குடைபவர் துவரித ழலர்வன குமுதம்
> மடைபெய ரனமென மடநடை யளகக்
> கடைசியர் முகமென மலர்வன கமலம்.

[இடைநுடங்கி நீர்கலங்க ஆடுகின்ற மகளிர்களது பவள இதழ்களைப்போல் செவ்வாம்பலும், மடைமீது அன்னமென நடப்பவரும் கூந்தலின் அழகோடு கூடியவருமான உழத்திச் சிறுமிகளின் முகம்போல் தாமரையும், குளங்களில் மலரும்]

> விதியினை நகுவன வயில்விழி பிடியின்
> கதியினை நகுவன வவர்நடை கமலப்
> பொதியினை நகுவன புணர்முலை கலைவாழ்
> மதியினை நகுவன வனிதையர் வதனம்.

[வனிதையர்களது வேல்போன்ற கூரிய விழிகள் விதியையும் *வென்று சிரிக்கும். அவர்நடை பெண்யானையை வென்று நகைக்கும். அவர்களது குவிந்த முலை தாமரை மொக்குக்களை அழகில் வென்று நகைக்கும். அவர்முகம் மானெனும் மறுவுற்ற சந்திரனை நோக்கி நகும்]

> பகலிலொ டிகலுவ படர்மணி மடவார்
> நகிலொடு டிகலுவ நளிவன ரிளநீர்
> துகிலொடு டிகலுவ சுதைபுரை நுரைகார்
> முகிலொடு டிகலுவ கடிமண முரசம்.

[மடவார்அணிந்த இரத்தினங்கள் ஒளியிற் சூரியனையும், அவர்களது முலைகள் திரட்சியிற் இளநீர்க்காயையும், அவருடுத்தும் வஸ்திரம் வெண்மையிலும் நுண்மையிலும் பாலின் நுரையையும், அவர்களது மணவினையில் முழங்கும் முரசவாத்தியம் ஒலியிற் கருமுகிலையும், இணையோநீர் எமக்கெனத் தனித்தனி வாதிற்கழைக்கும்]

> கோகில நவில்வன விளையவர் குதலைப்
> பாகியல் கிளவிக ளவர்பயி னடமே
> கேகய நவில்வன கிளரிள வளையின்
> நாகுக ளுமிழ்வன நகைபுரை தரளம்.

[மாதர் மிழற்றும் சற்கரைப் பாகுபோன்ற மொழிகளையே குயில்கள் கற்றுப்பேசும். மயில்களும் அவர்களது நடையையே கற்கும். இளம் சங்குகள்ஈனுகின்ற முத்தும் அவர்களது பற்களின் அழகைப் பெற்று விளங்கும்.]

இன்னவாறு நிகர்த்துச்சில நகைத்துச்சில பகைத்துச்சில அழகெனும் பாடமெல்லாம் அங்குள பொருள்கள்யாவும் அரிவையர்மாட்டே கற்கின்றன. கோசல வனிதையர் இட்டபிச்சையை யேற்றுத் தாம் அழகெனத் திகழ்வதென்றால் தெரிவையர் திறம் சாலப் பெரியதே. பெரியதெனின் விபரீத உவமையால் கம்பர் அதனைப் பெரியதாய்ப் பாராட்டினார் என்று அயர்தல் ஒன்றாது. இத்தகைய பேரழகு அவர்க்கு இருப்பதும் அதனின்றே மற்றவை அழகு பெறுவதும் இயற்கையே. எனெனில் புறத்தழகு கற்ற இச்செய்தியைத்தான் எதிர்நிலை யணியென்று இயம்பிவிடலாம். அகத்தழகு பயின்றவர் பரிசையும் செப்பினால் பின் அவ்வாறு நினைப்பதற்கு வழியில்லை; அந்நாட்டின் மைந்தர்கள் கலைபயிலும் இடம் எதுவெனில், நாமறிந்தபடி உருமி உருமி யடித்துரைக்கும் உபாத்திமார் கோட்டமன்று, தூங்கிவழிந்து திற்களுக் காணும் உயர்தரப் பாடசாலைகளன்று, புத்தகமும் கையுமாய்ப் பரிக்ஷையை நினைத்துப் பதறுகின்ற சர்வகலா சாலைகளுமன்று; அவர் படிக்கும் இடமும் மணங்கமழ் பூஞ்சோலை, போதிக்கு மாசிரியரும் நல்லவர் நல்லவர்:

> பந்தினை யிளையவர் பயிலிட மயிலூர்
> கந்தனை யனையவர் கலைதெரி கழகம்
> சந்தன வனமல சண்பக வனமாம்
> நந்தன வனமல நறைவிரி புறவம்.

[சந்தனவனமாகட்டும் சண்பகவனமாகட்டும் நந்தனவனமாகட்டும் தேனொழுகு முல்லைவனமாகட்டும், எங்கெங்குப்போய் மாதர்கள் பந்தாடுகின்றார்களோ அங்கங்கே மயிலிலமர்ந்த முருகவேள் அனைய மைந்தர்தாம் கலை தெரியும் கழகமென்று தொடர்ந்தனர்.]

பள்ளிக்குப் போனேனென்று பாவையரைத் தொடர்ந்து அலையுமிம் மாணவரை என்னென்றுரைப்பது! மகா துன்மார்க்கமாயிற்றே இது! கம்பரும் இவ்வாறு கூசாது சொல்வரோ! ஆதலால் இச்செய்யுளிற்குப் பொருளும் வேறாக இருத்தல்வேண்டும் என்று எண்ணி வலிந்து சில கொண்டாலும் அவை பொருந்தா. அதுவன்றிக் கம்பரோ மூன்று செய்யுள்களுக்கப்பால்,

> இடங்கொள் சாயல்கண் டிளைஞர் சிந்தைபோல்
> தடங்கொள் சோலைவாய் மலர்பெய் தாழ்குழல்
> வடங்கொள் பூண்முலை மடந்தை மாரொடும்
> தொடர்ந்து போவன தோகை மஞ்ஞைகள்.

* விதியினை அவர்விழி நகுதலாவது:— மாதரார் தம் பார்வையொன்றால் ஆடவரை உயிருண்டோ இல்லையோ என்னும்படி மூட்டிய காமத்தால் ஆக்கிவிடுகின்றார். பிரமன் இன்னாருக்கு இன்ன ஆயுள் என்ற விதித்து அனுப்பியிருந்தாலும் இம்மாதர் அவ்விதிக்குமே மாறாக அவ்வுயிரைக் கவர்ந்து கொள்ளத் தம் பார்வையால் இயலும். ஆனால் கிடக்கட்டுமென்று தம் கருணையால் இவர் விட்டுவைத்தாலல்லாது அவரவர் விதியளவு ஆடவர் தம் உயிர் நீடித்தல் அரிது.

[இடமகன்ற சோலையின்கண், மென்மலர்சூடிய கூந்தலும் முத்துவடம் புரண்ட முலையும் அசைய அசைய நடக்கும் பேரழகு வாய்ந்த மடந்தைமாரைத் தொடர்ந்து பின்பற்றுகின்ற வாலிபர்களது மனம் போலவே கலாப மயிலும் அவர்களைத் தொடர்ந்துபோயின]

என்று தன் கருத்தைத் தெரிவித்திருக்கின்றார். பின்னும் பூக்கொய்படலத்தின்கண், "மாதர் மிழற்றும் மழலைச்சொல் தெய்வப்பாடல் சொற்கலை என்னத் தெரிவார்," என்ற வேதசாஸ்திரமும் கலாசாஸ்திரங்களும் மாதரார் வாயினின்று வருகின்ற மழலைமொழிகளிலே மைந்தர் ஆராய்ந்தனர், என இக்கருத்துப் பற்றியே வந்திருக்கின்றது. இதிலோர் குற்றமுமில்லை. அழகிற்கீடுபட்ட கவிகளுக்கு இதுவே தகுந்த பாடசாலையென்று தோன்றும். ஆங்கிலத்தில் பேர்போந்த புலவர் பைரன் (Byron) என்பவரும் 'நான்கற்ற நூலெல்லாம் மாதரார் பார்வையே' (My only books are women's looks) என்று வாய்விட்டுத் தெரிவித்துக்கொண் டிருப்பதும் வியப்பன்று. ஒன்று நாம் மறந்தாலன்றிக் கம்பரின் கருத்தை விபரீதமாய்க் கொள்வதற்கு இடமில்லை. காரிகையார் பந்தாடு மிடமெல்லாம் தமக்குப் பாடசாலையாய் அமைத்துக்கொண்ட மைந்தர் எத்தகையவர்! களியாட்டயரும் காமுகப் பிள்ளைகளல்லாரே அவர். மயிலூர் கந்தனையே அனையவர். பிரணவத்தின் பொருளுரைக்க மாட்டாது திகைத்துநின்ற நான்முகனையே சிறைவைத்த அம்முருகவேளுக்கு இணையான குமாரும் குற்றமே கருதி மாதர் கூட்டுறவு தேடியவராய் எங்ஙனம் அமைதல் கூடும். கந்தபுராணம் கம்பருக்கு முந்தியதேனும் பிந்தியதேனும் ஒன்றினை மற்றொன்று ஒரு சிறிது சார்ந்திருத்தல் ஐயமின்றிப் புலப்படுகின்றது. ஏனெனில், கச்சியப்ப சிவாசாரியார் கந்தபுராணத்தில்,

> கானுலா நந்தன வனமுங் காரென
> வானுலாந் தண்டலை மருங்கும் வைகலும்
> வேனிலா னன்னவர் மகளிர் மேயினு
> ரூனுலாங் குரம்பையு ளுயிருற் றென்னவே

[வாசனை உலவுகின்ற நந்தவனங்களிலும் மேகமென்ன ஆகாயத்தளாவிய சோலைகளிடத்திலும், உடலோடு உயிர் பொருந்துவதுபோல், மன்மதனனைய மைந்தர் நாடோறும் மகளிரை நாடித் தொடர்ந்தனர்]

என்று பாடியிருப்பது சொல்லமைப்பாலும் கருத்திலும் பெரும்பான்மை கம்பரின் செய்யுளிற்கு இணங்கி இருக்கின்றது. இவ்விரண்டையும் ஒப்பு நோக்குங்கால், இப்பாட்டில் கூறிய மன்மதனை விட்டுவிட்டு அக்காப்பியத் தலைவனையே தன் நாட்டு மைந்தருக்கு உவமையாகக் கம்பர் எடுத்து அமைத்துக் கொண்டுளர் என்று எண்ண இடமிருக்க, இனி மாதரைத் தொடர்வதும் எது கருதி என்பதைக் கம்பரே கூறுகின்றார்.

ஆயின், மாதரார் பந்துபயிலும் இடங்கள் மைந்தருக்குக் கலைகள் கற்கின்ற கழகம் எவ்விதத்தில் ஆகின்றன! கோசலத்து மாதர்கள் அழகு உடையவர்களல்லர். அழகே அவர், அழகின் உருவமே போன்றவர். அவ்வழகு எனும் தன்மை மானுடரூபம் எடுத்து நடமாடும் இடம் என்றால், மைந்தர் அழகினைக் கண்கூடாகக் கண்டு இடைவிடாது அதனோடு பழகுமாறு அங்குப் போகின்றனர். அழகினைக் காணக்காணச் சிந்தையிலும் அவ்வழகே அமர்ந்து விடுகின்றது. அழகமர்ந்த நினைவே நல்லதோர் வாழ்க்கையில் இகபரம் இரண்டினிற்கும் ஆதாரமாகும் வகை யாவரும் அறிவர்*; ஆதலால் அதனை விரித்துரைத்தல் மிகையாகும். கருத்திற்குரிய அழகுகள், வாய்மை தர்மம் அன்புபோன்ற சில. இவை கண்ணிற்கும் மற்றப் புலன்களுக்கும் எட்டா. இவ்வழகெனும் தன்மைக்கு ஒலி ஒளி வடிவு எனும் உருவம் கொடுத்து வைத்தால் கண்ணும் காதும் அவ்வழகை நுகர்ந்து மனதிடைக் கொண்டுபோய்ச் சேர்க்க அங்கு அது அன்பும் அறனுமாய் மாறிவிட்டுக் கந்தபுராண முடையார் கூறியவண்ணம் வாழ்க்கைக்கே உயிர் நிலையாய்ப் பொருந்துகின்றது. ஒன்றினை நினைத் துணர்வதினும் கண்டறிதல் எளியதாதலால் கோசலமாணவர் முதற்பாடமாக அழகிகளைக் கண்ணாரக் கண்ட வண்ணமாய்த் தெரிவதற்கான கலைகளையெல்லாம் தெரிந்து கொள்கின்றனர் போலும். மாதரைக்குறிக்க நல்லார் என்றொரு சொல் தமிழிலே வழங்கிவருகின்றது. இவ்வுதவி செய்கின்றபடியாற்றான் அவர்களுக்கு அப்பெயர் வந்ததோ! இதுவே கருதி ஔவை பிராட்டியாரும்,

> நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க
> நல்லார்சொல் கேட்பதுவு நன்றே—நல்லார்
> குணங்க ளுரைப்பதுவு நன்றே யவரோ
> டிணங்கி யிருப்பதுவு நன்று.

என்று மாதருறவைப் பாராட்டியிருத்தலும் கூடுமென எண்ணும்படி இருக்கின்றது.

அழகினது தன்மையைக் கருத்தினால் உணர்வல்ல கலைகளைக் கற்பவர் கண்ணினாலதனைக் கண்டு பயில்கின்ற நன்மையன்றிப் பாவையர் பந்தடிக்கு மிடநாடும் குமரர்பால் குற்றங்கலந்த சிற்றின்ப நினைவு சிறிதேனும் இருந்ததில்லை. இருதிறத்தார் ஐம்பொறியும் நெறியின் புறஞ்செலாக் கோசலத்திற் குற்றச் செய்கை தோன்றியதென்னின் வேதமே வாய்மை இழந்ததை யொக்கும். அதுவன்றிப் பெற்ற செல்வத்திற்கேற்ற சீலமும் வாய்ந்தவர்களாயிற்றே அவர்: அந்நாட்டில்,

> கலஞ் சுரக்கு நிதியங் கணக்கிலா
> நிலஞ் சுரக்கு நிறைவள நன்மணி
> பிலஞ் சுரக்கும் பெறுதற் கரியதங்
> குலஞ் சுரக்கு மொழுக்கங் குடிக்கெலாம்.

மரக்கலமும் விளைநிலமும் பொற்சுரங்கமும் சுரக்கின்ற செல்வமெலாம் பெற்றுள செருக்கினால் சனங்கள்லோகாயதர்களாகி, மையிலகு விழிகொண்டு மையல்பூட்டும் மின்னார்களின்பமே மெய்யென்று போற்றிப் பொய் வேடம் மிகுதிகாட்டாம லிருக்கும் வண்ணம், நான்காமடியில் அவர்களுக்குக் காப்பிட்டதுபோல் பெறுவதற்கு அரிய குலத்தினால் ஒழுக்கமும் சேர்த்தே சுரந்ததென முடித்தனர் மெய்யுணர்ந்த நம்புலவர். ஆதலால், மாதரோடாடும் மைந்தர் மனதினில் கலை வளருமே யல்லாது அவர் மதியிழந்து நெறியின் புறம் செல்லார். அதுவன்றி இச்செய்யுளில் குலமே குடிகளுக்கு ஒழுக்கம் தந்தது எனும் வாக்கியம் நாமிங்கு விளக்கவரும் கருத்திற்கு மிகவும் முக்கியமானது.

குலம் என்பது பிறப்பினால் தொடர்ந்த சாதியைப் புல்லர்கள் வாயிலேயே குறிக்கும். ஆன்றோர் வழக்கை ஆராய்ந்தால் அச்சொல் ஈகை என்னும் ஒரு தன்மையைக் காட்டுகின்றது. 'இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்' என்று முன்னவளும், 'இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல் குலமுடையார் கண்ணேயுள' எனப் பின்பிறந்தோனும் ஒரு வாயாய் உரைத்த பொருள், குலமென்ற சொல் கொடையால் வருவதை நன்கு விளக்கும். 'குலத்தளவே யாகுமாம் குணம்' என்ற வாக்கியத்திலும் குணம் எதுவெனத் தேருங்கால், தக்கோர் குணத்தைக் கொடையால் அறியும்படி ஔவையாரும் விதித்துளர். இவைகளைக் கொண்டு பார்க்குங்காலையில் 'குலம் சுரக்கும் ஒழுக்கம் குடிக்கெலாம்' என்றதால் அந்நாட்டினர் ஈகையின் ஒழுக்கம் குன்றாக் கொள்கையர் என்றது பெறப்படுகின்றது. எனின் ஈதலே ஒழுக்கமாய மேதரும் பூஞ்சோலைமாணவர் மாதரினின்று ஒன்றைக் கவர நினைத்திருப்பார் என்றெண்ண இடமில்லை.

கயல் புரள்வது முதல் காளையர் கற்கின்றவரை மாதரார் உடனின்றுதவுவதோடு அமையாமல் கம்பர், அவர்களையே அந்நாட்டின் பெருமை யனைத்திற்கும் நடுநிலைத் தீபகமாக அமைத்துப் பாடிய,

> பொற்பி னின்றன பொலிவு பொய்யிலா
> நிற்பி னின்றன நீதி மாதரார்
> அற்பி னின்றன வறங்க ளன்னவர்
> கற்பி னின்றன கால மாரியே.

[மாதர்களது கற்பினால் காலம் கடவாது மழை பெய்வது போலவே, அவர்களது அழகே அந்நாட்டின் பொலிவிற்கும், அவர்களது பொய்யில்லாத நிலையே நீதிகளுக்கும், அவர்களது அன்பே அறங்கள் வளர்வதற்கும், ஆதாரமாய் இருந்தன.]

என்னுமிப் பாட்டினோடு படலத்தை முடிவிற்குக் கொண்டுவருகின்றார். சென்ற சில நாட்களாகக் கோசலத்தவர்களுடன் கேண்மை பூண்டு ஒழுகினோ மாதலால் அவ்வுத்தமர்தம் உறவுநின்று பிரிதற்கு மனம்வரவில்லை. அகல்வதன்முன் அவர் குணாதிசயங்களைத் தொகுத்தேனும் ஒருமுறை பாராட்டி யகல்வோம், அழகொடு பழகி அழகினில்முதிர்ந்த கலைவளரு நெஞ்சினராய் ஈகைமிகுந்த அன்போடு பெற்றசெல்வமெல்லாம் பிறர்க்கே உரியதாக்கி அறத்தால் வரும் இன்பக்கடலைந்து அல்லலில்லாத் தனிப்பெரும் வாழ்க்கையில் இயற்கையோ டியன்று அமர்ந்த நலமெலாம் நண்ணிய குலக்கோசலத்தின் பெருநாட்டார் கூட்டுறவு எட்டிலேனும் நமக்கு நல்கிவைத்த பெருந்தகைப் புலவர்பிரான் கம்பருக்குக் கைம்மாறு பூதலம் முழுதும் தேடினும் தென்படற் கியலுமோதான்! குடிமக்களின் மனநிலையை ஒன்றுமே மதியாது, என்னுடு உன்னுடு என்று வெறும் மண்ணுடுகாட்டி இக்காலம் வாதாடுவார் வாய்ப்பேச்சை என்னென் றுரைப்பது!

T. N. சேஷாசலம்.

* அறியாதார், இப் பத்திரிகையிலேயே, 'கலாநிலயம் செய்யும் கருமம் செயல்வகையும்' என்ற தலையங்கத்தின்கீழ் தொடர்ந்துவருகின்ற கட்டுரைகளைக் கருத்தூன்றிப் படிப்பது நலமாகும்.



## ராபர்ட் பர்ன்ஸ்

### (Robert Burns)

### To A Mouse.

### வயலெலிக் குரைத்த வார்த்தை.

ஸ்காட்லாண்ட் தேசத்தில் நூற்றெழுபது வருடங்களுக்குமுன் ஓர் ஏழைக்குடியில் பிறந்த ராபர்ட் பர்ன்ஸ் என்னும் கவி, தனக்கு வயது இருபத்தாறு நடக்கின்ற காலத்தில் ஒருநாள் வயலில் உழுதுவருகையில் கொழுநுனி எலிவளையொன்றனுள் பாய்ந்து அழிக்க அதனின்று பயந்தோடும் எலியைப்பார்த்துப் பரிவுடன் உரைத்த சொற்கள் பாராட்டத்தக்கன. ஈச்வர சிருஷ்டியோடு கலைஞர்தம் இதயம் ஐக்கியமாக, அன்புவெள்ளம் பெருகி அகங்காரத்தை அப்புறம் அடித்துக்கொண்டு போய்த் தள்ளிவிடுமென்பது ஒரு நாட்டிற்கே ஒரு பாஷைக்கே உரியதன்று. இதனுண்மையைக் கீழ்வரும் இம்மொழிபெயர்ப்பில் காணலாம்:—

"சின்னஞ்சிறு உருவத்துள் அஞ்சுமொரு நெஞ்சத்துப் பிராணியே! ஐயோ, உற்றபயம் நின்மார்பில் எத்தனை பெரியது. குழறக்குழற நின்குரல் துண்ணெனப் பதறி நீ முடுகவும் வேண்டா. கொல்கின்ற போர் எடுத்து நின்னை யான் துரத்திப்பிடிக்க நினைந்திலேன் கண்டாய்.

"மண்ணினில் நின்னுடன் பிறந்தவன், நின்போலொருநாள் இறக்கவு மிருப்பேன், எளியே னென்னைக் காணவும் வெருவுற்று நீ யோடினுயெனின், மார்தர்யாம் புரிதொழில் மிகக் கொடியதெனும் உலகவதந்தி மெய்யேயாக, இயற்கைச் சிருஷ்டியி லியைந்த நட்பை மனிதனின் ஆட்சி அறுக்கவு மாயிற்றே! பெருந்துயர் பேதையே னெய்துகின்றேன்.

"ஒவ்வொருவேளை ஒன்றிரண்டு நீ திருடிக்கொள்ள நேர்வதுமுண்டு. ஈதறிவேன். ஆயினென்! ஏழைப்பிராணி நீயும் பிழைக்கவேண்டாவோ! போர் நெல்லில் கதிரொன்றுதானே நீ வேண்டுவதெல்லாம். இதனை நீ நொள்ளக்கொள்ள அருளையான் பெறுவேன். குறையக் காண்பேனோ!

'சிற்றெலிச் செல்வ, நின்சின்னஞ் சிறுகுடிலும் சிதைந்துபோயது. காற்றோ புகுந்து இதனைக் கடிதடித்துப் போகின்றது. புதுவீடுகட்ட நின்பால்பொருளும் இல்லை. குளிரக் குளிர மார்கழித் திங்கள் வருவதுமாகுமே!

"அறுத்த வயலும் வறியதாக எய்க்கும் மாரி நண்ணுவது கண்டு, காற்றொடு மழைக் கொதுங்கி இங்கு நீ அமைந்து வாழ நினைத்தனை. ஐயோ, படபட வென்று படுகொலை உழுபடை நின்வளை பாய்ந்து தகர்த்ததே!

"அந்தச் சருகும் செத்தையும் குவிக்கும் பொருட்டு வாய்தான் சலிக்க எத்துணை கறித்தாயோ, பாவம்! பட்ட பாட்டிற்கெல்லாம் பதிலாக வீடும் கூரையுமின்றி வெளிக்கிளம்ப நேர்ந்ததே நின்கதி. வீசுகின்ற மழைச் சாரலிற்கும் கூசுகின்ற கூதிர்க் குளிரிற்கும் எவ்விடம் இனிப் புகலென ஒதுங்கி வாழ்வாய்.

"ஆயினும், எலியே, முன்புத்தியெல்லாம் பயன்படாமற் போகலாம் என்பதை ரூபிக்க நீ யொன்று மாத்திரமே இருப்பதாக எண்ணாதே. மனிதனும் எலியும் யோசித் தமைக்கும் ஏற்பாடுக ளெல்லாம் ஒரே விதமாய்ப் போக்கிலே போய்விடுகின்றன. எதிர்பார்த்த இன்பத்திற்குப் பதிலாய் இருவருக்கும் எஞ்சுவது துன்பமும் துயருமன்றி வேறு ஒன்றும் கண்டிலேம்.

"இருப்பினும், என்னோடு ஒப்புநோக்கின் வாழ்க்கை நலம் நினக்கே அமைந்துளது. இன்றையச் செய்தியொன்றே நின்னை உறுத்தும். மற்று, ஐயகோ, யானோ, பாழாய்க்கழிந்த நாளெல்லாம் கருதி அழிகின்றேன். காணுதபயம் நாளையொன்று சேருமோ என்றஞ்சி இருபுறமும் நெடுந்தூரம் நோக்கி யுழல்கின்றேனே!

# வர்த்தமானம்.

**இந்திய சட்ட சபை:**—இச்சபையில் சைமன் கமிஷனைப் பகிஷ்காரம் பண்ணவேண்டுமென்னும் நிபந்தனை ஏற்றுக்கொள்ளப்பட்டது. 68 அங்கத்தினர் பகிஷ்காரத்துக்காகவும் 62 பேர் அதற்கு எதிராகவும் ஓட்டுக் கொடுத்தார்கள்.

***

**காந்தி அடிகளின் தேகநிலை:**—மகாத்மா காந்தியின் ஆரோக்கிய நிலைமையைப்பற்றி வைத்தியர்கள் முன்னிருந்ததைப் பார்க்கிலும் இப்போது தேகநிலை தேற்றம் அடைந்திருக்கிறது என்றும் இன்னும் முற்றாய் இளைப்பாறவேண்டும் என்றும் சொல்லுகிறார்கள்.

***

**நாபா மகாராஜா:**—தன் ராஜ்ஜியத்தை விட்டகன்றபோது கட்டுப்பட்ட நிபந்தனைகளுக்கு மாறாக ராஜ்ஜிய விரோதமான காரியங்களில் தலையிட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டு இந்திய கவர்ன்மெண்டால் அவர்க்குரிய சுதந்திரங்களை இழந்து கோடைக்கானலில் வசிக்கும்படி வைப்பட்டிருக்கிறார்.

***

**சர்வகட்சி மஹாநாடு:**—டில்லியில் சர்வகட்சி மகாசபை இன்னும் ஒரு முடிவுக்கும் வரவில்லை. சபையில் வாதிக்கும் விஷயங்களும் பகிரங்கப்படுத்தவில்லை. இந்து முஸ்லிம் வித்தியாசமும் மாகாணப் பிரிவுகளும் மற்றும் இந்தியாவுக்கு எவ்விதமான அரசாட்சி ஏற்றதென்பதும் இவைபோன்ற விஷயங்களும் இங்கே வாதிக்கப்பட்டு முடிவு செய்யப்படும்.

***

**சாலை வரி:**—அடுத்த சென்னைச் சட்டசபைக் கூட்டத்தில் தெரு ஆய வரிகளை (tole gate) நிறுத்தவேண்டும் என்பதைப்பற்றித் தீர்மானிக்க விருக்கிறார்கள். இந்த வரிகள் இருப்பதனால் சனங்களுக்கு இடைஞ்சல் மாத்திர மல்லாமல் தெருக்களை ஒரே மாதிரியாய் நல்ல நிலைமையில் வைப்பதற்கு ஏற்ற வழியொன்றும் இல்லையாம்.

***

**பகிஷ்காரக் குழப்ப விசாரணை:**—சென்னையில் மூன்றும் தேதி நடந்த ஹர்தால் குழப்பங்களைப் பற்றிச் சைமன் கமிஷன் பகிஷ்காரக் கமிட்டியார் ஒரு விசாரணை நடத்திவருகின்றனர். இன்னும் விசாரணை முடிவாகவில்லை. ஸ்ரீமான் சத்தியமூர்த்தி ஸ்ரீமான் கந்தசாமி செட்டியார் ஸ்ரீமான் K. N. கிருஷ்ணசாமி அய்யர் ஸ்ரீமான் E. L. சாஸ்திரி ஆகிய இவர்கள் இதுவரையில் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்கள்.

***

**வேலையில்லாதார் நிலை:**—டில்லி ராஜாங்க சபையில் ஸ்ரீமான் P. C. தேசிகாச்சாரி தற்காலம் தேசத்தில் தொழில் இல்லாமலிருப்பவர்கள் நிலையை விசாரணை செய்யும்படி ஒரு கமிட்டி ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டதற்குக் கவர்ன்மெண்டு அங்கத்தினர் இந்த விஷயம் மாகாணத்துக்கு மாகாணம் வேறுபட் டிருக்கிறது. ஆகையால் இதைப்பற்றி விசாரணை செய்யவேண்டியவர்கள் அந்தந்த மாகாண அதிகாரிகளே என்றும், படித்தவர்கள் எல்லாரும் அரசாங்க உத்தியோகம் வேண்டுமென்றிருத்தலே இந்நிலைக்கு முக்கிய காரணம் என்றும், படித்தவர்கள் கைத்தொழில் விவசாயம் வியாபாரம் முதலிய தொழில்களைச் செய்யத் துணிந்தார்களானால் இந்தக் கஷ்டம் மிகவும் குறைந்துவிடும் என்றும் சொல்லித் தடுத்து விட்டார்கள்.

**பொருள் உரிமை:**—பொருள் உரிமை (Property) என்ற விஷயத்தைப்பற்றி குவீன்மேரி காலேஜ் மிஸ் தெரிசா ஜோசேப் என்பவர் காலேஜில் ஒரு பிரசங்கம் செய்தார். அவர் முக்கியமாய் எடுத்துச்சொன்னது:— பொருள் உரிமை என்பது சொத்துக்களை உபயோகிக்கின்றதும் அனுபவிக்கின்றதுமான சுதந்திரத்துடன் கூடிய ஆட்சியே. ஆதியில் பொருள் சனசமூகத்துக்குப் பொது உரிமையாய் இருந்தது. தனி உரிமை பின்னுல் ஏற்பட்டது. அறிவுடையோ ரெல்லாம் புண்டைக் காலத்திலும் தற்காலத்திலும் தனிஉரிமை இருப்பது அவசியம் என்று ஒத்துக்கொண் டிருந்தாலும் செல்வம் யாரிடத்திலிருந்தாலும் பொதுசன நன்மைக்காகவே உபயோகப்படுத்த வேண்டுமென்பதை வற்புறுத்தி யிருக்கிறார்கள். மேலும் தனிஉரிமை இருப்பது அவசியம். தனிஉரிமை இல்லாது போனால் மனிதருக்குச் சிறந்த குணங்கள் உண்டாவது முடியாது. பொருள்கள் எல்லாருக்கும் பொதுவாய் அமையுமானால் மனிதர் சிறுவர்களுடைய நிலையிலேயே என்றைக்கும் இருப்பார்கள். ஆனால் தனி உரிமைக்கும் ஒரு எல்லைவேண்டும்.

***

**இந்தியா மந்திரியின் வாக்கு:**—இந்திய மந்திரி சென்ற வாரம் சைமன் கமிஷனைப்பற்றிப் பேசுகையில் சொன்னதாவது:—இந்தியர்கள் எல்லாரும் கமிஷனுக்கு முன் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டுக் கமிஷனுக்கு வேண்டிய உதவி செய்வது உத்தமம் என்றும் அவர்கள் அவ்விதம் செய்யாது விட்டாலும் கமிஷன் தானாக நடைபெறும் என்றும் மேலும் கமிஷனைப் பகிஷ்கரிக்கிறவர்கள் நாளடைவில் தாங்கள் இங்கிலாந்து அரசாட்சியின் பரிபாலனத்துக்குக் கீழிருக்கும் இந்திய சனங்களுடைய அபிப்பிராயத்தை எவ்வளவு சிறிது தெரிவிக்கிறார்கள் என்பதையும் அறிவார்கள் என்றும் மேலும் லட்சக் கணக்கான முஸ்லிம் லட்சக் கணக்கான தாழ்ந்த வகுப்பினர் லட்சக் கணக்கான வியாபார ஆங்கிலோ இந்தியர் ஆகிய இவர்கள் எல்லாரும் தங்கள் அபிப்பிராயத்தை கமிஷனுக்குத் தெரிவிக்க விருக்கிறார்கள் என்பதையும், அதன்மேல் கமிஷனைப் பகிஷ்கரிப்பவர் இந்திய சனங்களில் மிகச் சிறிய பாகமென்றும் இவர்கள் கமிஷனோடு சேராதுவிட்டாலும் கமிஷன் வேலை நடக்கவேண்டு மென்று பெரும்பான்மையானவர்கள் அறிக்கைசெய்வார்கள் என்றும் சொன்னார். பின்னர் சர் ஜான் சைமன் டில்லியில் பத்திரிகை நிருபர்களுக்குக் கமிஷன் வேலை நடத்த விருக்கிற விதத்தைப்பற்றித் தெரிவித்திருக்கிறார். அதாவது இப்போது இவர்கள் செய்யவிருக்கிறது, என்னவென்றும் எவ்வகையில் தங்கள் விசாரணையை நடத்துவதென்பதையும்பற்றித் தீர்மானம் செய்வதே. அதைப் பற்றி ஒருவகையான ஒழுங்குக்கு வந்திருக்கிறார்கள். சீக்கிரத்தில் அந்த ஒழுங்கு என்ன என்பதை வெளியிடுவார்கள். கமிஷன் முன் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்க விரும்புகிறவர்கள் ஒரு மெமாரண்டம் கமிஷனுக்குக் கொடுக்கவேண்டு மென்றும் இவ்விதம் கொடுக்கப்பட்ட மெமாரண்டங்களைக் கமிஷன் அங்கத்தினர்கள் பார்வையிட்டு அதன்மேல் நேரில் எவ்வளவு தூரம் வாக்குமூலம் வாங்கவேண்டும் என்பதையும் எந்த எந்த விஷயங்களைப்பற்றி வாக்குமூலம் வாங்கவேண்டுமென்பதையும் முடிவுசெய்வார்கள். கவர்ன்மெண்டாரும் தங்கள் அபிப்பிராயத்தை இதே மாதிரியாய் வெளியிடவேண்டும். அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இந்த முறையில் ஒருவகையான வித்தியாசமும் காட்டப்படமாட்டாது. கமிஷன் சுற்றுப் பிரயாணத்தைப்பற்றி அப்போதைக்கப்போது தெரிவிப்பார்களென்றும் இவ்விதச் சுற்றுப் பிரயாணம் செய்வது தாங்கள் நேரில் சகல விஷயங்களையும் பார்த்துத் தெரிந்து கொள்வதற்காக என்றும் சொல்லியிருக்கிறார்.



(6) ஸ்ரீமத் வால்மீகி

**இராமாயண வசனம்.**

பண்டித நடேச சாஸ்திரியாரால்
தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு
தகுந்த தமிழ் வித்துவான்களால் பார்வையிடப்பட்டு
பிழையறப் பரிசோதித்துப் பிரசுரம் செய்யப்பட்டது.

இப்பதிப்பின் விசேஷம்

தமிழிற் கம்பர் முதலிய மகாகவிகள் இராமாயணத்தை இயற்றி யிருந்தபோதிலும், செய்யுள் நடையை அறிந்து படித்து ஆனந்திக்கிறவர்கள் வெகு கொஞ்சமாயிருக்கிறபடியால் ஸ்திரீகளும், சிறுவர்களுங்கூட எளிதில் தெரிந்துகொள்ளும்படியாகத் தெளிவான எளிய நடையில் வசனரூபமாய் இவ் வால்மீகி ராமாயணம் எழுதப்பட்டிருக்கிறது.

இப்பதிப்பு இதன் ஆதிகிரந்தத்தின் கௌரவத்திற்கும் மகிமைக்கும் தக்கவாறு கனமான உயர்ந்த காகிதத்தில் பெரிய எழுத்தில் நன்றாய்ப் பரிசோதித்து, வெகுபொருள் செலவிட்டு, சிரத்தையுடன் மிகச்சிறப்பாய் அச்சிட்டு அழகாய்ப் பயிண்டு செய்திருக்கிறது.

| | | |
|---|---|---|
| பாலகாண்டம் | 244 பக்கம் | 6 காண்டம் |
| அயோத்தியாகாண்டம் | 501 ,, | |
| ஆரணியகாண்டம் | 254 ,, | |
| கிஷ்கிந்தாகாண்டம் | 226 ,, | ரூ 15 |
| சுந்தரகாண்டம் | 260 ,, | |
| யுத்தகாண்டம் | 702 ,, | |
| சுந்தரகாண்டம் தனியே | | ரூ. 2 4 0 |

**கே. மஹாதேவன்,** புஸ்தக வியாபாரம்,
1, ராமசாமிபிள்ளை தெரு, வேப்பேரி, சென்னை

ஏமாங்கதத்து

**இளவரசன்**

PRINCE OF YEMANGADA

T. N. சேஷாசலம் B.A.B.L., இயற்றியது.

அன்பனின் உயிர்காக்க ஆணுடை தரித்துத் தேர் நடத்திய வீரமகள் பஞ்சரவல்லி செய்த சாகசங்களும், அறிவிலாப புன்கவி ஒருவன் படுத்தியபாடும், வாய்மைநெறி ஒருபுறமும் தன்மகன்மேலிருந்த வாஞ்சனை மறுபுறமும் பிடித்திழுக்கத் திகைப்புற்ற வேந்தன் செய்த சில செயல்களும், ஆசைபுகுந்து அறிவழிக்க ஒரு சேனைத்தலைவன் சிந்தித்த சூழ்ச்சிகளும், கற்பிற்கரசியாய அசோகவதி தன் கணவனின் பிழைகளைப் பாராட்ட நினையாத வண்ணமும், சுவை பல கலந்து அழகோடமைந்த தமிழ் நடையினில் வரைந்துள்ள இக்கதை நூல் யாவரும் பன்முறை படித்து இன்புறுதற்கு இயன்றது. பள்ளிகளில் பாடமாக வைப்பதற்குமேற்றது.

விலை ரூ. 1 0 0

வேண்டுவோர்:—

**பி. ஜி. பால் & கம்பெனி,**
**பப்ளிஷர்ஸ்,**
2, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு
ஜார்ஜ்டவுன், மதராஸ்.

**யுனைடட் இந்தியா லைப் அஷ்யுரன்ஸ்**
(2) **கம்பனி, லிமிடெட்.**

ஹெட் ஆபீஸ் : சென்னை] [1906-வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

பாலிஸிஹோல்டர்களுடைய ட்ரஸ்ட்
பண்ட் சுமார் ரூபா 25 லக்ஷம். 188991.

சேர்மன்:—Sir. M. Ct. முத்தய்ய செட்டியார்.

நிர்ப்பயமானது, பேருதவிசெய்வது:—வட்டிக்கு விட்டிருக்கும் தொகையாவும் பத்திரமாயிருப்பதும், பாலிஸிஹோல்டர்களுக்கு வேண்டிய உதவி அன்போடு ஒழுங்காகச்செய்து தருவதும் இந்த யுனைடட் இந்தியா கம்பனிக்கு உள்ள சில முக்கிய அங்கங்கள்.

யுனைடட் இந்தியா கம்பனி சென்னையில் இருப்பது. ஆனால் அதன் கீர்த்தி இந்தியா முழுவதும் பரவியுள்ளது. உயிர் அஷ்யுரன்ஸ் கம்பனிகளில் இந்த யுனைடட் இந்தியா கம்பனியானது, "மிகுந்த பலமானதென்றும் பழுதற்றதென்றும் ஒழுங்காயும் மட்டுதிட்டக் கவனத்தோடும் நடத்தப்படுவது" என்றும், இந்த விஷயங்களைச் சீர்தூக்கி அறியவல்ல பேரறிஞர் வேறு மாகாணத்தைச் சேர்ந்தவர் கருதுகின்றார்.

காலதாமதம் செய்யாமல் சேரவேண்டியதை அவரவர்களுக்குச் செலுத்திவிடுவது: காரியங்களை மிக்ககவனத்தோடு நிர்வாகம் செய்வது. தாராளமாயும் நியாயமாயும் ஏற்படுத்தியிருக்கின்ற பாலிஸி நிபந்தனைகள்: மிதமான பிரீமிய கட்டணம்: தகுந்த போனஸ்: இவைகளும் இவைபோன்ற வசீகரமான மற்ற குணங்களும் யுனைடட் இந்தியா கம்பனியை ஒருவிதத்திலும் குறைவில்லை என்று ஜனங்கள் கொண்டாடத் தக்க ஒரு உயிர் அஷ்யுரன்ஸ் கம்பெனியாகச் செய்து வைத்து இருக்கின்றன.

முக்கியமாக தென் இந்திய ஜனங்களுக்கு உபயோகம் ஆகும்பொருட்டு ஏற்படுத்தியிருப்பது தென்னிந்தியா முழுவதிலும் இந்த யுனைடட் இந்தியா கம்பனி ஒன்றுதான் என்று சொல்லலாம். மிக்க ஒழுங்காகவும் அனுதாபத்தோடும் இங்கே தன் வேலையைச் செய்து வரவேண்டுமென்று இந்தக் கம்பனி எப்பொழுதும் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றது

இதைப்பற்றி முழுவதும் தெரிந்துகொள்ள வேண்டுவோர்க்குக் கேட்டவுடனே யாவும் தெரியப்படுத்துவோம்.

தபால் பெட்டி 281,
10, மக்ளீன் தெரு, சென்னை.

ஸ்டார் அண்டு கம்பனி
மானேஜர்கள்.

(1). இண்டஸ்டிரியல் & புருடன்ஷியல்
அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

[1913 ஸ்தாபனம்] தலைமை ஆபீஸ் : பம்பாய்.

நன்கு மதிக்கப்பெற்று விருத்தியடையும்

இந்திய லைப் ஆபீஸ்.

போர்டு ஆப் டைரக்டர்கள்.

Sir. லல்லுபாய் ஸமால்தாஸ் K. T. C. I. E. (சேர்மன்) — Sir. சிமன்லால் H. ஸெதால் வாட் K. C. I. E.

Sir. ஹுகும் சந்த ஸரூப் சந்த K. T. — வேல்ஜி லக்ஷிமி B. A. L. L. B.

மோடிலால் C. ஸேதால்வொட், அட்வகேட் பம்பாய். — லால்ஜி நாராயண்ஜி J. B. மில் சொந்தக்காரர்.

கம்பெனியின் முதல் இரண்டு சேர்மன்களும், காலஞ்சென்ற ஸர். பிரோஸிஷா எம். மேத்தா M. A. L L. D. K. C. I. E. யும் காலஞ்சென்ற ஸபூர்ஜி புரோச்சா K. T.

| | |
|---|---|
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. 2,21592. |
| வசூலிக்கப்படாத மூலதனம் | ரூ. 16,25000. |

1. பறி முதல் செய்யப்படாத இயற்கையாகவுள்ள உரிமைகள்
2. பாலிஸிஹோல்டர்களே நேரில் கண்காணிப்பதற்காக அவர்களுக்கு இரண்டு டைரக்டர்கள் தேர்ந்தெடுக்க உரிமை.
3. குறைந்த அளவு செலவு.
4. பாத்யதைகளை உடனுக்குடன் பைசல் செய்வது.

நல்ல கமிஷனில் வேலை செய்ய, எல்லா விடங்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.

விவரங்களுக்கு எழுதவும்:—

நாராயிண் தாஸ் கிர்தர் தாஸ்,
உள்ளூர் மானேஜர்,
நெ. 10 மக்ளீன் தெரு, மதராஸ்.

Dr. Orison Swett Marden's
World-Famous Inspirational Books

(3) TEACH AND TRAIN YOU

To discover what career you are best fitted for ; To succeed in your chosen calling ; To overcome shyness, timidity, fear, vacillation and lack of confidence; To be healthy, happy and successful.

GETTING ON

CONTENTS:—The Precedent Breaker—No Chance—Your fortune is in yourself—A cheery disposition—How to be popular?—Physical vigour and achievement—Burn your bridges behind you—Emergencies, the test of ability—Go into business for yourself—The stimulus of rebuffs—Gentleness *versus* Bluster—The miracle of polite persistency—Clear grit did it—System in business—The tragedy of carelessness—Put new blood into your business—A vacation as an investment—Time tossers — Diverted by salary —Mere money-making is not success.

RISING IN THE WORLD

CONTENTS:—Wanted a man—Dare—The will and the way—Uses of obstacles—One unwavering aim—Self-help—Clear grit—Rich without money—Opportunities where you are—The might of little things—Nature's little bill—Choosing a vocation—The man with an idea—Decision—The curse of Idleness.

SELF-INVESTMENT

CONTENTS:—If you can talk well—Enjoying what others own—Personality as a success asset—How to be a social success—The miracle of Tact—Ambition—Education by reading—Reading a spur to ambition—The self-improvement habit—The raising of values—Public speaking—Self-reliance.

HE CAN WHO THINKS HE CAN

CONTENTS:—He can who thinks he can—Getting aroused—Education by absorption—Freedom at any cost—What the world owes to dreamers—Responsibility develops power—An over-mastering purpose—Has your vocation your unqualified approval?—Happy, if not, why not?—Sizing up people—What has luck done for you?—Success with a flaw—Getting away from Poverty

PEACE, POWER AND PLENTY

CONTENTS:—The power of the mind to compel the body—Poverty, a mental disability—The law of opulence — Health-building during sleep — Health through right thinking—Mental chemistry—Imagination and health—How suggestion influences health—Why grow old?—The miracle of self-confidence—Destructive suggestion—Worry, the disease of the age—Fear, the curse of the race—Self-control—Good cheer, God's medicine.

EVERY MAN A KING

CONTENTS:—Steering thought prevents life-wrecks—How mind rules the body—Thought, cause of health and disease — Killing emotions — Mastering our moods—Cheerful thinking—Negative creeds paralyse—Affirmation creates power—Thoughts radiate as influence—How thinking brings success?—Power of self-faith—Building character—Strengthening deficient faculties—The power of imagination—The coming man.

THE SECRET OF ACHIEVEMENT

CONTENTS:—Moral sunshine—"Blessed be drudgery"—Honesty, as Principle and as Policy—Habit the servant, the master — Trifles — Courage — Self-control—The School of Life—Being and Seeming—Decide—Tenacity of purpose—Purity is power.

THE MIRACLE OF RIGHT THOUGHT

CONTENTS:—The divinity of desire!—Success and happiness—Working for one thing and expecting something else—Expect great things of yourself—Self-encouragement — The crime of the "Blues" Change the thought, change the man—The paralysis of fear—One with the divine—Getting in tune—New way of bringing up children—Training for longevity.

Special Indian Edition Rupee 1-8-0 each

V. KALYANARAM IYER & Co.,
BOOK-SELLERS AND PUBLISHERS, VEPERY, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Edited and Published by Mr. E. Kumariah, B.A., B.L.